ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 4 விஷு ௵ ஆனி ௴ கதிர் 12

ஜூலை-1941

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—	1
அன்றாட உலகம்	—	8
இந்தியாவில் கல்வி அபிவிருத்தி	—	14
துலாக்கோல். (புஸ்தக விமரிசனம்)	—	15
தண்கதிர்.	— வித்வான் S. உமைதாணுபிள்ளை	18
நிறப் பாகுபாடு	— ஸர் ஸிட்னி ஆலிவர்	20

சமாதானத்திற்கு வழி என்ன?	—		25
உலகத்துப் பெரிய நகரங்களில் சில	—		32
பண்டைக்காலத்திய தண்டனைகள்	—	"தமிழ் மகன்"	33
விருந்தும் வாழ்க்கையும்	—		37
தற்கால யுத்த முறைகள்	—	எப். ஸ்டெர்ன் பெர்க்	38
உயர்ந்த மலைகள்	—		42
ஸ்டாலின்—ருஷ்யாவின் சர்வாதிகாரி	—		43
இந்தியா அடிமைப் பட்டதற்குக் காரணம் புத்த மதமா? இல்லையென்கிற கட்சி		ராகுல பண்டிதர்	45
சிலப்பதிகாரம்—அடைக்கலம்	—	மா. சர்மா B. A. (Hons)	50
அன்பினால் வெற்றிகொள்	—	வ. பார்த்தசாரதி	56
ருஷ்யாவைப் பற்றி—	—		59

அன்பர்களுக்கு

நமது பிரதிநிதி ஸ்ரீமான் எஸ். ஏ. சின்னசாமித் தேவர் அவர்கள், அப்பர் பர்மாவில் மாந்தலே மேமியோ முதலிய பகுதிகளில், "ஜோதி"யின் அபிவிருத்தியை நாடி வருகின்றார். அவருக்கு அன்பர்கள், எல்லாவித ஆதரவுகளையுமளித்துதவும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்

சூசகத்தையும் காண்பிக்க வில்லை யென்று சொல்லப்படுகிறது.

ஸையாமின் மாஜி மன்னரான பிரஜாதிபோக் இன்று இங்கிலாந்திலுள்ள ஸர்ரே என்ற இடத்தில் இறந்து விட்டார்.

31 ஈராக்கிலே நடைபெற்றுக் கொண்டிருந்த யுத்தமானது சமாஸமாக முடிந்து விட்டது. இன்று, பிரிட்டிஷ் பிரதிநிதிகளுக்கும், ஈராக்கியப் பிரதிநிதிகளுக்கும் சமாதான ஒப்பந்தம் கையெழுத்திடப் பெற்றது.

இங்கிலாந்தில், துணிகளை, குறிப்பிட்ட விகிதாசாரப்படிதான் விற்பனை செய்ய வேண்டுமென்று அதிகாரிகள் ஓர் உத்திரவு போட்டிருக்கிறார்கள்.

ஜூன்

1 மைசூர் சமஸ்தான திவான் ஸர் மிர்ஸா இஸ்மெயில், இன்றைய தினம் தமது பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

2 ஸிரியாவில் ஜெர்மன் துருப்புகள் பிரவேசித்து விட்டன.

ஸைப்ரஸ் தீவை ஜெர்மானியர்கள் தாக்கினால் அதற்காக எல்லா விதமான பந்தோபஸ்துகளும் செய்யப் பட்டிருப்பதாக ஓர் அறிக்கை கூறுகிறது.

ஹிட்லரும் முஸோலினியும் இன்று ப்ரென்னர் கணவாயண்டை சந்தித்துப் பேசினார்கள்.

3 ஈராக்கில் ஜமீல் மித்பை என்பவருடைய தலைமையில் புதிய மந்திரிச் சபை ஒன்று அமைந்து விட்டது.

பிரிட்டிஷ் தொழிலாளர் கட்சிக் கூட்டம் இன்று லண்டனில் கூடியது. ஹிட்லருடனும் முஸோலினியுடனும் பிரிட்டனானது, எந்த விதமான சமாதான ஒப்பந்தத்தையும் செய்து கொள்ளக் கூடாதென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

க்ரேட் யுத்தத்தில் 2800 நியூ ஜீலந்தியர்கள் இறந்து போய் விட்டார்களென்று சொல்லப்படுகிறது.

ஸிரியாவிலுள்ள அலெப்போ நகரத்தைப் பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் பலமாகத் தாக்கின.

1-4-1937 லிருந்து 31-3-41 வரை, சென்னை மாகாணத்தில் 12,56,063 ரூபாய் கிராம புனருத்தாரணத்திற்காகச் செலவழிக்கப் பட்டிருக்கிறது.

4 மாஜி கெய்ஸர் இன்று காலை 11-30 மணிக்கு டூர்ன் என்ற இடத்தில் மரணமடைந்தார்.

ஈராக்கிலுள்ள மோசூல் பிரதேசத்தைப் பிரிட்டிஷ் துருப்புகள் ஆக்ரமித்துக் கொண்டு விட்டன.

பிரெஞ்சு விச்சி அரசாங்கத்தார், ஸிரியாவை பிரிட்டிஷ் படையெடுப்பினின்று பாதுகாப்ப தென்று தீர்மானித் திருக்கின்றனர்.

5 ருஷ்யாவில் பிரிட்டிஷ் ஸ்தானீகராயுள்ள ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் இன்று லண்டனுக்கு மாஸ்கோவிலிருந்து புறப்பட்டு விட்டார்.

6 பிரிட்டிஷ் அரசாங்கத்தில் முன்னர் யுத்த மந்திரியாயிருந்த மிஸ்டர் ஹோர் பெலிஷா, எடின்பரோவில் பேசுகையில், க்ரேட் யுத்தத்தில் பிரிட்டிஷ் துருப்புகள் பின் வாங்கிக் கொண்டது எதைக் குறிக்கிற தென்றால், நாம் போதிய தற்காப்புடனும் போதிய தயாரிப்புடனும் இல்லை யென்பதைக் காட்டுகிற தென்று கூறினார்.

ஜெர்மனியோடு பிரெஞ்சு அரசாங்கம் உடந்தையாயிருந்து எல்லாக்காரியங்களை

யும் செய்வதைக் கண்டித்து அமெரிக்கா அரசாங்கம், பிரெஞ்சு அரசாங்கத்திற்கு ஓர் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

7 இன்றைய தினத்திலிருந்து இந்தோ-பர்மா வியாபார ஒப்பந்தம் அமுலுக்குக் கொண்டு வரப் பட்டது.

துருக்கியில் உணவுப் பொருள்களை, ஒரு கட்டுப் பாட்டுக்குட்படுத்தி விற்க வேண்டு மென்று அரசாங்கத்தார் உத்திரவு போட்டிருக்கின்றனர்.

அமெரிக்காவின் அந்நிய நாட்டிலாகா காரியஸ்தர், பிரெஞ்சு அரசாங்கத்தின் ஸ்தானீகரைக் காண மறுத்து விட்டார். இதனால், இந்த இரண்டு அரசாங்கங்களுக்கும் மனஸ்தாபம் முற்றிக் கொண்டு வருகிறதென்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர்.

8 பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகளும் சுதந்திர பிரெஞ்சுத் துருப்புகளும் இன்று சிரியாவுக்குள் பிரவேசித்துவிட்டன.

அலெக்ஸாந்திரியா துறைமுகத்தை, ஜெர்மன் ஆகாயவிமானங்கள் பலமாகத் தாக்கின.

ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் மனஸ்தாபங்கள் முற்றிக்கொண்டு வருகின்றன வென்று சொல்லப்படுகிறது.

9 லிபியாவில் இத்தலியின் வசமிருக்கும் பல பிரதேசங்களைப் பிரிட்டிஷ் ஆகாயவிமானங்கள் பலமாகத் தாக்கின.

ஈராக்குக்கும் இத்தலிக்கும் இருந்த சிநேக ஒப்பந்தம் ரத்து செய்யப் பட்டது.

இன்று மாஜி கெய்ஸர், டூர்னில் அடக்கம் செய்யப் பட்டார்.

சிரியாவிலுள்ள பல இடங்களை பிரிட்டிஷ் துருப்புகள் ஆக்ரமித்துக் கொண்டு விட்டன.

10 ஈராக், சிரியா முதலிய பிரதேசங்களில் பிரிட்டிஷார் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றி பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் நீண்ட வாதம் நடை பெற்றது. பிரிட்டிஷார் சிரியாவில் பிர வேசித்ததை ஆதரித்து மிஸ்டர் சர்ச்சில் பேசினார்.

"ராபின் மூர்" என்ற அமெரிக்கக் கப்பலை, ஒரு ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல் மூழ் கடித்து விட்டது.

11 பெல்ஜியம், ஜெர்மனி முதலிய நாடுகளிலுள்ள ஊர்களைப் பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் பலமாகத் தாக்கின.

பிரிட்டனுக்கு அமெரிக்கா எந்தெந்த விதமாக உதவி செய்ய வேண்டு மென்பதைப் பற்றி அமெரிக்க அரசாங்கத்தார் தயாரித்திருந்த மசோதாவை பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் இன்று அமெரிக்க காங்கிரஸ் முன்னர் ஆஜர் படுத்தினார்.

12 இன்று ஜார்ஜ் சக்ரவர்த்தியின் பிறந்த தினம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மெங்கணும் கொண்டாடப்பட்டது.

அபிசீனியாவிலுள்ள அஸ்ஸாப் என்ற முக்கியமான துறை முகத்தை பிரிட்டிஷ் துருப்புகள் கைப்பற்றிக் கொண்டு விட்டன.

தற்போது நடை பெறுகிற யுத்தத்தின் நிலைமையைப் பற்றி ஆலோசிக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகளும் மற்ற நேசக் கட்சிப் பிரதிநிதிகளும் லண்டனில் ஒரு மகா நாடு கூடினார்கள். இந்த யுத்தத்தில் பிரிட்டன் எப்படியாவது வெற்றி பெற்றே தீரு மென்பதை வற்புறுத்தி மிஸ்டர் சர்ச்சில் நீண்ட தொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

13 சிரியாவிலுள்ள டமாஸ்கஸ் நகருக்குப் பத்து மைல்களுக் கருகாமையில் பிரிட்டிஷ் படைகள் வந்து சேர்ந்து விட்டன.

அபிசீனியாவில் ஜிம்மா என்ற இடத்திலுள்ள இத்தாலியப் படைகளை பிரிட்டிஷ் படைகள் சூழ்ந்து கொண்டு விட்டன.

ஜெர்மனியின் யுத்தக் கப்பலொன்று, பிரிட்டிஷ் ஆகாய விமானங்களால் தாக்கப்பட்டது.

14 ஜெர்மனி, வெகுசீக்கிரத்தில் ருஷ்யாவைத் தாக்குமென்ற வதந்தி பலமாயிருக்கிறது.

பிரான்ஸை ஜெர்மனி வசம் ஒப்புக் கொடுத்து விட்டதற்காக தளபதி டார்லனையும், மிஸ்டர் லாவலையும், அமெரிக்க அரசாங்கத்தின் பிரதிநிதியான மிஸ்டர் கார்டல் ஹல் குறை கூறினார்.

சுங்கிங் நகரத்தை ஜப்பானிய ஆகாய விமானங்கள் பலமாகத் தாக்கின.

15 பிரிட்டிஷ் அரசாங்கத்தார், புதிதாக ஒரு ரகசிய ஆயுதத்தைக் கண்டு பிடித்திருக்கின்றனர். இதைக் கொண்டு சத்துருக்களுக்கு அதிகமான சேதத்தை உண்டாக்கலாமென்று ஓர் அறிக்கை கூறுகிறது.

16 மிஸ்டர் சர்ச்சில், அமெரிக்காவுக்கு ரேடியோ மூலம் ஒரு பிரசங்கம் செய்தார். அதில், அமெரிக்காவின் உதவியை பிரிட்டன் அதிகமாக எதிர்பார்க்கிறதென்றும், இந்த யுத்தத்தில், நாஜீயத்தை ஒழித்து ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதே பிரிட்டனின் நோக்கமென்றும் குறிப்பிட்டார்.

அமெரிக்காவிலுள்ள ஜெர்மன் ஸ்தானீகரின் காரியாலயங்களையெல்லாம் மூடிவிடுவதாக பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் தீர்மானித்தார்.

வட ஆப்ரிக்காவில் நடைபெறுகிற தீவிரமான யுத்தத்தில், பிரிட்டிஷ் படையினர் சுமார் இரண்டாயிரம் இத்தாலியர்களையும் சில சேனாதிபதிகளையும் சிறையாக்கி விட்டனர்.

பர்மாவில் இந்தியர்கள் குடியேறுகிற விஷயமாக, பர்மா அரசாங்கத்தாருடன் கலந்து பேசி ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வதற்காக, இந்தியா அரசாங்கத்தின் தூது கோஷ்டி ஒன்று ஸர் கிரிஜா சங்கர் பாஜ்பாயின் தலைமையில் இன்று ரங்கூனுக்கு வந்து சேர்ந்தது.

17 ஜப்பானுக்கு எண்ணெயை ஏற்றிக் கொண்டு வந்து கொண்டிருந்த ஒரு கப்பலை அமெரிக்கா அரசாங்கத்தினர் கைப்பற்றிக் கொண்டு விட்டனர்.

கிரேக்க அரசாங்கத்தைச் சேர்ந்த யுத்தக் கப்பல்கள் பலவும் இப்பொழுது அலெக்ஸாந்திரியா துறைமுகத்துக்கு வந்து சேர்ந்திருக்கின்றன.

சீனாவுக்கும் பர்மாவுக்கும் மத்தியிலுள்ள எல்லையை நிர்ணயித்து இரண்டு அரசாங்கங்களும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டன.

18 ஜெர்மனிக்கும் துருக்கிக்கும் இன்று சிநேக ஒப்பந்தம் கையெழுத்திடப் பெற்றது.

சைப்ரஸ் தீவில், ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் தவிர்த்து மற்றவர்கள் அனைவரும் காலி செய்து விட்டனர்.

லிபியாவில் பிரிட்டிஷ் படைகள் பின் வாங்கிக் கொண்டன.

அமெரிக்காவிலுள்ள ஜெர்மன் ஸ்தானீகர்களுடைய காரியாலயங்களை மூடிவிடுவதாக பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் தீர்மானித்ததைக் கண்டித்து, ஜெர்மானிய அரசாங்கம், அமெரிக்காவுக்கு ஒரு தாக்கீது அனுப்பி யிருக்கிறது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இது வரையில் 244,000 பேரை யுத்தக் கைதிகளாகப் பிடித்திருக்கிறார்களென்றும், இவர்களில் 177,937 பேர் இத்தாலியர்களென்றும் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் கூறப்பட்டது.

19 பின்லாந்தின் எல்லைப் புறத்தில் ஏராளமான ஜெர்மன் துருப்புகள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன வென்று ஒரு செய்தி கூறுகிறது.

ஜெர்மனியிலுள்ள எல்லா அமெரிக்க ஸ்தானிகர்களுடைய காரியாலயங்களையும் மூடி விடுமாறு ஜெர்மனி உத்திர விட்டிருக்கிறது. இதே மாதிரி இத்தலியும் செய்திருக்கிறது.

ருஷ்யாவுக்கும் தனக்கும் ஏதோ மனஸ்தாபம் இருப்பதாகச் சொல்லப் படுகிற வதந்திகளை ஜெர்மனி இன்று பலமாக மறுத்திருக்கிறது.

அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு ஒழுங்காக சாமான்கள் சப்ளை செய்து கொண்டு வருவதற்காக அமெரிக்காவில் ஒரு காரியாலயத்தை ஏற்படுத்த இந்தியா அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கின்றனர். இதற்கு ஸர் ஷண்முகம் செட்டியார் தலைவராயிருப்பார்.

20 அத்லாந்திக் மகா சமுத்திரத்தில் அமெரிக்காவுக்குள்ள ஆதிக்கத்தைத் தொலைக்க ஜெர்மனி முயற்சி செய்யுமானால், அதனை எந்த வகையாலும் அமெரிக்கா எதிர்த்து நிற்கு மென்று பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறினார்.

1941ம் வருஷம் மே மாதத்தில் மட்டும், பிரிட்டிஷாருக்கும் நேசக் கட்சியினருக்குமாகச் சேர்ந்து மொத்தம் 461,328டன் நிறை யுள்ள 98 கப்பல்கள் மூழ்கி யிருக்கின்றன வென்று ஓர் அறிக்கை கூறுகிறது.

21 அமெரிக்காவிலுள்ள இத்தாலிய ஸ்தானிகர்களுடைய காரியாலயங்கள் மூடப்பட்டு விட்டன.

இன்று, ஸிரியாவிலுள்ள டமாஸ்கஸ் நகரம் பிரிட்டிஷார் வசப்பட்டு விட்டது.

22 இன்று, ஜெர்மனி, ருஷ்யாவை சுமார் 1500 மைல் நீளமுள்ள நீண்ட போர் முனையில் பல இடங்களிலும் தாக்கியது. ருஷ்யர்கள் பலமாக எதிர்க்கத் தொடங்கி யிருக்கிறார்கள். ருஷ்யாவுக்கு எல்லா விதமான உதவிகளையும் செய்வதாக மிஸ்டர் சர்ச்சில் ஓர் அறிக்கை வெளியிட்டார்.

23 ஜெர்மானியப் படைகள், ருஷ்யப் படைகளினால் பின் தள்ளப் பட்டன வென்று இன்றைய அறிக்கை கூறுகிறது.

ருஷ்யா மீது, ஜெர்மனி எதிர் பாராத விதமாகப் படையெடுத்திருப்பதை அமெரிக்கா பலமாகக் கண்டித்திருக்கிறது.

24 ருஷ்யாவுக்கு, ஒரு ராணுவக் கோஷ்டியை அனுப்புவதாகப் பிரிட்டன் கூறியது. இதை ருஷ்யா ஏற்றுக் கொண்டிருக்கிறது.

பிரிட்டன், தினந்தோறும் யுத்தத்திற்காக 10,250,000 பவுன் செலவழிக்கிறதென்று இன்று காமன்ஸ் சபையில் ஸர் கிங்ஸ்லி வுட் கூறினார்.

25 ஜெர்மன்—ருஷ்யச் சண்டையில், ஜெர்மன் துருப்புகள், லிதுவேனியாவின் தலைநகரான வில்னாவுக்குள் பிரவேசித்து விட்டன வென்று சொல்லப்படுகிறது.

நார்வேயிலிருந்து பின்லாந்துக்கு ஜெர்மன் துருப்புகள் செல்வதென்றால் ஸ்வீடன் வழியாகச் செல்ல வேண்டும். இதற்கு ஸ்வீடன் அரசாங்கம் அநுமதி தந்து விட்டது.

பர்மாவில் இந்தியர்கள் குடியேறுவதன் சம்பந்தமாக இந்தியா அரசாங்கப் பிரதிநிதிகளும் பர்மா அரசாங்கப் பிரதிநிதிகளும் ஒரு சமரஸ ஒப்பந்தத்திற்கு வந்து விட்டனர்.

ருஷ்யாவுக்கு ஆயுத சப்ளை செய்வதாக அமெரிக்கா உறுதி கூறி யிருக்கிறது.

டமாஸ்கஸ் நகரத்தின் மீது ஜெர்மன் ஆகாய விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன.

26 ஜெர்மானியர்கள் எட்டு போர்முகங்களில் ருஷ்யப்படைகளைத் தாக்கிவருகிறார்கள்.

ருஷ்யாவுக்கு அமெரிக்கா உதவி செய்யுமானால், தன்னுடைய நிலைமையைப் புனராலோசனை செய்து கொள்ளும்படியான நிர்ப்பந்தம் ஜப்பானுக்கு ஏற்படுமென்று ஜப்பானில் அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவர் கூறுகிறார்.

துருக்கியக் கப்பலொன்று மூழ்கடிக்கப் பட்டது. யார் மூழ்கடித்த தென்று தெரியவில்லை.

27 ஸர் ஸ்ட்ராபோர்ட் கிரிப்ஸின் தலைமையில் நியமிக்கப்பட்ட பிரிட்டிஷ் தூதுகோஷ்டி மாஸ்கோ நகரத்தையடைந்து விட்டது.

28 முன்னம் பிரெஞ்சு சேனாதிபதியாக இருந்த தளபதி காமலின் என்பவர், பிரான்சில் சிறைவைக்கப் பட்டிருந்தார். இப்பொழுது அவர் தப்பியோடிவிட்டதாகத் தெரிகிறது.

29 சங்கிங் நகரத்தை ஜப்பானிய ஆகாய விமானங்கள் பலமாகத் தாக்கின.

பிரெஞ்சு விச்சி அரசாங்கம், ருஷ்யாவுடன் வைத்துக்கொண்டிருந்த அரசியல் தொடர்பை அறுத்துக் கொண்டு விட்டது.

அபிசீனியாவில் பிரிட்டிஷ் துருப்புகள் பல இடங்களில் முன்னேறி அநேக புதிய இடங்களைக் கைப்பற்றிக் கொண்டிருக்கின்றன.

பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் பிரான்சின் வடபாகத்தில் பல இடங்களிலும் தாக்கி சேதத்தை உண்டு பண்ணி வருகின்றன.

30 ஜெர்மன்—ருஷ்ய யுத்தத்தில் இருதரப்புப் படையினரும் சிறிதுகூட விட்டுக் கொடுக்காமலும் சளைப்படையாமலும் போர் புரிகின்றனர்.

கொச்சி சமஸ்தான திவான் ஸர் ஆர். ஷண்முகஞ் செட்டியார், இன்றைய தினத்திலிருந்து தமது பதவியை ராஜிநாமா செய்கிறார்.

நண்பர்களோடு பேசுகிறபோது, நம்மைப்பற்றிப் பேசுகிற பாகத்தைக் கழித்துவிட்டோமானால், நாம்பேசுவதெல்லாம் மிகச் சொற்பமாகவே இருக்கும்.

—ஹாஸ்லிட்

இந்தியாவில் கல்வி அபிவிருத்தி

இந்தியாவில் பிரதி வருஷமும் ஆங்கில முறையில் கல்வியானது எப்படி பரவிக் கொண்டு வருகிறதென்பதைக் கீழ்க் கண்ட புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அதாவது, அரசாங்கத்தினால் நேராக நடத்தப் படுகிற பள்ளிக்கூடங்களிலும், அரசாங்கத்தின் ஆதரவு பெற்று நடைபெறுகிற பள்ளிக்கூடங்களிலும் ஆண் பிள்ளைகள் எத்தனை பேர் படிக்கிறார்கள், பெண் பிள்ளைகள் எத்தனை பேர் படிக்கிறார்கள் என்பது இங்கு எடுத்துக் காட்டப்படுகிறது.

வருஷம்	ஆண் பிள்ளைகள்	பெண் பிள்ளைகள்	மொத்தம்
1926-27	9,315,140	1,842,356	11,157,496
1927-28	9,778,737	1,996,445	11,775,222
1928-29	10,028,086	2,137,753	12,165,839
1929-30	10,256,914	2,258,212	12,515,128
1930-31	10,313,493	2,375,593	12,689,086
1931-32	10,273,888	2,492,649	12,766,537
1932-33	10,247,062	2,606,470	12,853,532



சரித்திர தீபம்

(முதற் பாகம்)

எழுதியவர்: ஸ்ரீ எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்; வெளியிட்டோர்: மங்கள நூலகம், நுங்கம் பாக்கம், சென்னை; டபிள் கிரவுன் அளவு **1x16; 200** பக்கங்கள்; விலை ரு **1-4-0.**

ஸ்ரீ எம். எஸ் சுப்பிரமணிய ஐயர் அவர்கள், இந்திய சரித்திர ஆராய்ச்சி விஷயத்தில் பெரிதும் ஈடுபட்டவர் என்பதை நாம் அறிவோம். இந்தியாவின் உண்மைச் சரித்திரத்தை இளைஞர்களுக்கு லேசான முறையில் எடுத்துச் சொல்லி அதன் மூலமாக தேசிய உணர்ச்சியையு உண்டு பண்ண வேண்டு மென்பது இவரது ஆவல். இந்த நோக்கங் கொண்டே இவர், ராஜ புத்திர விஜயம், மகாராணா பிரதாப சிம்ஹன், சிவாஜி, சக்ரவர்த்திகள் சரிதை முதலிய பல நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறார். இவற்றைத் தமிழ் நாட்டார் படித்து இன்புற்றிருக்கின்றனர். இப்பொழுது நமது பார்வைக்கு வந்துள்ள சரித்திர தீபம் என்னும் நூலில் இருபத்து நான்கு கட்டுரைகள் அடங்கி யிருக்கின்றன. இவை ஏற்கனவே தினமணி பத்திரிகையில் வெளிவந்திருக்கின்றன. தமிழர்கள் இவற்றைப் படித்துச் சுவைத்திருக்கிறார்கள். இப்பொழுது இவை நூல் வடிவாக வந்திருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருமென்பதில் ஐயமில்லை. இந்த மாதிரியான நூல்கள், பாட புத்தகங்களாக வைக்கப்பட வேண்டுமென்பது நமது விருப்பம். அந்த நாள் எந்த நாள்?

'பாபூ'
அல்லது
நானறிந்த காந்தி

ஹிந்தியில் எழுதியவர்: ஸ்ரீ கனசியாமதாஸ் பிர்லா; தமிழில் மொழி பெயர்த்தவர்: ஸ்ரீ அ. சுப்பையா; வெளியிட்டோர்: லலிதா அண்ட் கம்பெனி, **289,** லிங்க செட்டித் தெரு, ஜி. டி. சென்னை; டபிள் கிரவுன் அளவு **1x16; 227** பக்கங்கள்; விலை: ரு **1-8-0**

காந்தியடிகளைத் தாம் எவ்விதம் தெரிந்து கொண்டிருக்கிறாரென்பதை ஸ்ரீ பிர்லா இந்நூலின் மூலம் தெரிவிக்கிறார். ஆனால் இந் நூலின் மூலம்

ஸ்ரீ பிர்லாவை நாம் நன்கு தெரிந்து கொள்கிறோம். சாதாரணமாக எல்லோரும் ஸ்ரீ பிர்லாவை ஒரு பணக்காரர் என்றும் அர்த்த முறையில் காந்தியடிகளுடன் பழகிக்கொண்டு வருகிறாரென்றுதான் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த நூலைப் படிக்கிறபோது அவர் ஒரு சிறந்த உரைநடைக் காரராகவும், கவி உள்ளம் படைத்தவராகவும் காட்சியளிக்கிறார். இஃது அநேகருக்குப் புதுமையாகவே இருக்கும். ஸ்ரீ சுப்பையா, முன்னுரையில் கூறுகிற மாதிரி, ஸ்ரீ பிர்லாவினிடத்தில் பூமகளும் நாமகளும் சேர்ந்து வாழ்கிறார்கள். எல்லோரிடத்திலும் காணக் கூடிய காட்சியா யிது?

காந்தியடிகளின் தினசரி வாழ்க்கையைப் பற்றிப் பொது ஜனங்களுக்குத் தெரியாத பல விஷயங்களை ஸ்ரீ பிர்லா இந்த நூலின் மூலம் தெரிவிக்கிறார்.

> "லண்டனுக்குப் போகும்பொழுது கப்பலில் ஒரு வெள்ளைக்காரன் தினந்தோறும் வந்து காந்தியடிகளைத் திட்டிவிட்டுப் போவது வழக்கம். ஒருநாள் அவன் காந்தியடிகளைப்பற்றிச் சில விநோதமான கவிதைகள் எழுதி அவரிடம் எடுத்து வந்தான். அவைகளை அவரிடம் கொடுத்தவுடன் அவர் அவைகளைக் கிழித்துக் குப்பைக் கூடையில் எறிந்துவிட்டார்; ஆனால் அவைகளில் குத்தப்பட்டிருந்த குண்டூசியை ஜாக்கிரதையாக எடுத்துத் தம் டப்பியில் வைத்துக்கொண்டார். அவன் "காந்தி, படித்துப் பாரேன். இதில் ஒன்றும் சாரமில்லையா?" என்றான். "ஆமாம்! இருந்த சாரத்தை எடுத்து டப்பியில் வைத்துவிட்டேனே!" என்று பதிலளித்தார். இதைக்கேட்டு எல்லோரும் சிரித்தனர். அவன் வெட்கிப் போனான்.

காந்தியடிகள் சிறிய உபயோகமுள்ள பொருளையும் கெட்டுப்போக விடுவதில்லை. ஒரு கெஜம், இரண்டு கெஜம் நீளமுள்ள சணற் கயிறுகளை ஜாக்கிரதையாய் வைத்திருந்து மாதங்கள் சென்ற பிறகும், அவசியம் நேரும்பொழுது நினைவாக எடுத்துத் தருவார். அவருடைய ராட்டையின் கீழே வைக்கப்பட்டிருக்கும் கருப்புத் துணியின் சிறு துண்டு 12 வருஷங்களாக ஒன்றே இருந்துவருகிறதைப் பார்க்கிறேன். வரும் கடிதங்களிலுள்ள எழுதாத பாகங்களைக் கிழித்து பை செய்து உபயோகிக்கிறார். இந்தக் காரியங்கள் முதல்தரமான கருமியையும் தோற்கடிப்பவையா யிருக்கின்றன.

லண்டனில் நடந்த விஷயம். காந்தியடிகள் தங்குமிடம் நகரத்திலிருந்து வெகு தூரத்தில் கிழக்குப் பக்கத்திலிருந்தது. அதிலிருந்து மேற்கே ஏழெட்டு மைல் தூரத்தில் ஆபீஸிருந்தது. பகல் போஜனம் ஆபீஸிலேயே நடந்து வந்தது. தங்குமிடத்திலிருந்து தினமும் ஆகாரங்கள் ஆபீஸுக்குக் கொண்டு வரப்பட்டுவந்தன.

சாப்பாட்டுடன் காந்தியடிகள் சில சமயங்களில் தேனும் சேர்த்துக்கொள்வதுண்டு. நாங்கள் இங்கிலாந்துக்குச் செல்லும் வழியில், எகிப்தில் தங்கியபொழுது, எகிப்தியர் ஒரு ஜாடி நிறையத் தேன்

கொடுத்தனர். அதிலிருந்து சிறிது தேன் தினந்தோறும் சாப்பிட்டு வந்தார். அன்றைய தினம் சாப்பாடுடன் தேன் கொண்டுவர மறந்து விட்டதால், ஸ்ரீமதி மீராபாய் நான்கு அணா கொடுத்து ஒரு சீசா தேன் வாங்கி வந்து, உணவுடன் வைத்திருந்தார். காந்தியடிகள் சாப்பிட உட்கார்ந்ததும் தேன் சீசாவைக்கண்டார். "இந்த சீசா ஏது?" என்று கேட்டார். தேன் வாங்க நேர்ந்த விஷயம் தெரிவிக்கப் பட்டது. அவ்வளவுதான்; புயலைப் போல் கோபம் பொங்கி எழுந்தது. "ஏன் இப்படிக் காசை வீணாக்குகிறீர்கள்? ஜனங்கள் கொடுக்கும் பொருளை நாம் இப்படியா வீண் செலவு செய்வது? ஒரு நாள் தேன் இல்லையானால் நான் பட்டினியாயிருந்து விடுவேனா?" என்றார்.

இவையெல்லாம் சிறிய விஷயங்கள் தான்; சில்லறைச் சம்பவங்கள் தான். ஆனால், இவைகளைக் கொண்டுதான், ஒருவரிடத்திலே யுள்ள மகான் தன்மையை நாம் அறிந்து கொள்ள முடியும். மகான்களா யிருக்கப் பட்டவர்கள், எதையுமே சிறிய விஷயமென்று ஒதுக்கித் தள்ளி விடமாட்டார்கள். காந்தியடிகள் ஒரு மகானல்லவா?

ஸ்ரீ சுப்பையயாவின் மொழி பெயர்ப்பு மிக அழகாயிருக்கிறது. ஸ்ரீ பிர்லாவே, தமிழில் எழுதினாற் போலிருக்கிறதென்று சொன்னால், அஃதொன்றே ஸ்ரீ சுப்பையாவை நாம் பாராட்டியதாகும்.

பெரிய மாளிகை யொன்றை எப்படி குறித்தகாலத்தில் கட்டி முடிக்க முடியாதோ அதைப்போல், மகத்தானதொரு வேலையையும் குறித்தகாலத்தில் செய்து முடிக்க முடியாது.

—சிப்பன்

—வித்வான் S. உமைதாணுபிள்ளை

தண்கதிர்

1. தண்கதிரே! தண்கதிரே!
 தயவுள்ள தண்கதிரே!

மண்ணில் நீ மலியிருளை
 மாண்புடனே மாற்றிடுவாய்!

2. உன்னிருளை நீக்குதற்கு
 உலகதனில் யாருளரோ?

நின்னிருளை நீக்காமல்
 நிதமும் நீ அலைவதேனோ?

3. ஆம்பலினம் அலர்வதற்கும்
 அழுஞ் சேய்கள் மகிழ்வதற்கும்

கூம்புமனம் விரிவதற்கும்
 குணமுடனே வந்திடுவாய்.

4. பூவினங்கள் பூத்து நல்ல
 புதுமணத்தை வீசுதற்கும்

தாவியிங்கே வந்திடுவாய்
 தண்கதிரைத் தந்திடுவாய்.

5. தலைநிமிர்ந்து யெழுமுன்றன்
தண்கதிரைக் காண்டலுமே

அலைகடலும் உன்வரவால்
அகமகிழ்ந்து யெழுந்திடுமே.

6. பரந்தமனப் பார்வையதாய்
பாரினையே பார்த்திடுவாய்,

சுரந்த பால் தன்மையினும்
தூய்மையாய் விளங்கிடுவாய்.

7. மழையினுக்கும் வெயிலினுக்கும்,
மனஞ்சிறிதும் மாறியிடாய்,

உழைப்பினுக்கே உடலெடுத்து
உலகினையே காத்திடுவாய்.

8. பிள்ளைத்தமிழ் பேசுதற்குப்
பெருநிதியாய்ப் பொலிந்திடுவாய்;

பிள்ளைகளும் கண்டுன்னை
பெருமகிழ்ச்சி கொண்டிடுமே.

9. ஒப்பில்லா சேய்களெல்லாம்
உன்னையே பிடிப்புதற்குத்

தப்பிதமாய் நின்றிடுவர்
தரணியில் புதுமையிதாய்.

—ஸர் சிட்னி ஆலிவர்

நிறப் பாகுபாடு

ஜாதிகளுக்குள்ளும், குடும்பங்களுக்குள்ளும் நபர்களுக்குள்ளும் உள்ள துவேஷங்களில் அடங்கியிராத அம்சம் பொதுவும் நிறத் துவேஷத்தில் அடங்கியிருக்கவில்லை. நிறத் துவேஷமானது சமீப காலத்தில் ஏற்பட்டதொரு பிரச்னையேயாகும். பிரிஸ்டலில் அடிமை வியாபாரம் தொடங்கியதிலிருந்தும் இந்தியாவில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்ததிலிருந்தும் தான் இந்த நிறத் துவேஷமேற்பட்டிருக்கிறது. ஆசியாவில் ஆதிக்கஞ் செலுத்துவதனாலும், அடிமைகளை வைத்து நடத்தி வந்த பழக்கத்தினாலும் இந்த துவேஷம் ஏற்பட்டிருக்கிறதென்பது பல ஜாதியாருக்குள்ளிருந்து வந்த துவேஷத்தை ஆராய்ந்தவர்களுக்கு நன்கு தெரிய வரும். நிறத் துவேஷமானது வெளிக்குத் துவேஷமாகத் தோன்றுகிறது. ஆனால் காதலுக்கு நிறத் துவேஷமென்ற தடை எதுவுங் கிடையாது. கறுப்பு மனிதரைச் சேர்ந்த ஸ்திரீகள் வெள்ளையர்களை மணந்து வாழ்வது 'அவ்வெள்ளைக்காரர்கள் மனதிற்கு ஒத்ததாக இருக்கிறது. கருப்பு மனிதர்கள் வெள்ளைக்கார ஸ்திரீகளுடன் வாழ்வது அந்த ஸ்திரீகளுக்குப் பிடித்ததாக இருப்பினும் அது வெள்ளைக்கார சமூகத்திற்குப் பிடிக்கவில்லை. அவர்கள் இதன் காரணமாக வெகுண்டு, யுனைடெட்ஸ்டேட்ஸில் பல நீக்ரோவர்களைக் கொன்று இருக்கிறார்கள்; உயிருடன் நீக்ரோவரை நெருப்பிட்டு எரித்திருக்கின்றார்கள். 'யுத்த காலத்தில் இங்கிலாந்திற்கு வந்த கறுப்பு மனிதர்களான சிப்பாய்கள் அடிக்கடி தாக்கப்பட்டனர். இதனால் ஆங்கிலேயர் அவர்களுக்கு இங்கிலாந்து வர அனுமதியளிப்பதை நிறுத்தி விட்டனர். ஜாதித் துவேஷமானது நிறத்துவேஷத்தைவிட அதிக புராதனமானது. அது மனிதர்களது மனதில் நன்கு குடி கொண்டிருக்கின்றது. ஜாதித் துவேஷம் நிறத் துவேஷத்தை விட அதிகமாகப் பரவியிருக்கிறது. நிறம், சிகை முதலியன ஒருவர் எந்த ஜாதியாரைச் சேர்ந்திருக்கின்றார் என்பதைக் காட்டுவதாக நாம் கொண்டால் நிறத் துவேஷமென்பது ஜாதித் துவேஷத்தின் மற்றொரு பெயராகும் என்பதில் ஐயமில்லை.

ஆண் பெண்பாலருக்குள் உள்ள துவேஷமானது ஜாதித் துவேஷத்தைப் போன்றுள்ளது. இரண்டின் உற்பத்திக்கும் மூலகாரணமாக உள்ள விஷயங்கள் ஒன்றாகத்தான் இருக்கின்றன. இரு பாலருக்கும் தேக சம்பந்தமாகவுள்ள 'வித்தியாசங்களிலோ அன்றி மனோபாவ சம்பந்தமாகவுள்ள வித்தியாசங்களிலோ அனுதாபமில்லா திருப்பதுதான் அவர்களுக்குள் உண்டாகும் துவேஷத்திற்குக் காரணமாக இருக்கின்றது. இருபாலரும் தங்களுக்குத் தேக பல சம்பந்தமாக 'உள்ள வித்தியாசங்களைப் பொதுப்படையாக்கி அதனைக் கொண்டு ஒருவரை யொருவர்

மெல்லியலா ரென்றும் மூடர்க ளென்றும் கூறிக் கொண்டு இகழ்ந்து கொள்ளுகின்றார்கள். ஆனால் காதலானது எவ்வாறு நிறத் துவேஷத்தையும் பொருட் படுத்தாது போக்கி விடுகின்றதோ அதே மாதிரியே ஆண் பெண் பாலருக்குள்ள துவேஷத்தையும் போக்கி விடுகின்றது.

எகிப்தின் மத்தியபாகம், அரேபியா, மெஸெபொடேமியா முதலிய விடங்களில் மனிதர்கள் தங்களது நாகரிகத்தையும் காருண்யத்தையும் மென்மேலும் வளர்த்து வந்தார்கள். இங்கிருந்துதான் ஜனங்கள் உலகின் இதர பாகங்களுக்குக் குடியேறிச் சென்றார்களென்ற கொள்கையை ஆதரிப்பவர்களது தொகை மென்மேலும் அதிகரித்து வருகிறது. மத்திய தரைக்கடலை யடுத்த பிரதேசங்களுக்குச் சென்றவர்கள் பழுப்பு நிறமாகவும், வட ஐரோப்பாவில் மூடுபனி நிறைந்த காடுகளுக்குச் சென்றவர்கள் வெள்ளை நிறமாகவும், மங்கோலியா முதலிய விடங்களுக்குச் சென்றவர்கள் மஞ்சள் நிறமாகவும் மாறிப் போனார்கள். பலவிதமான இந்த நிறங்களுக்கும் ஒழுக்கத்திற்கும் யாதொரு விதமான சம்பந்தமும் கிடையாது. இவையெல்லாம் தேகத்திலுள்ள நரம்புகள் சரீர புஷ்டியையுண்டாக்கக் கூடிய ஒருவித திரவ பதார்த்தம். இவற்றைச் சூர்ய வெப்பம் தாக்குதவாறு அதற்குத் தகுந்த முறையில் இயற்கையாக ஏற்படும் மாறுதல்களேயாகும்.

எல்லோரும் ஓரே இடத்திலிருந்து பரவிச் சென்றவர்கள் என்று ருசுவாகி விடுவதால், அடிமை ஜாதியா ரென்றும், ஆதிக்கஞ் செலுத்த ஏற்பட்ட ஜாதியா ரென்றும் பாகுபாடுகள் ஏற்படுத்திக் கொண்டதற்கு சமூகத்தினைச் சேர்ந்தவர்கள்தான் என்ற கொள்கைக்கு வெகு காலமாகச் சேமித்து வைக்கப்பட்ட ஆயுதங்கள் ஓர் ஆதாரமாக இருக்கின்றன. கிரிபால்டி என்ற இத்தாலிய மலையிலுள்ள குகைகளில் ஒன்றில் கிராமன்கள் என்ற ஜாதியாரது எலும்புகள் முதலியன கிடைத்தன? இவர்கள்தான் ஐரோப்பிய சமூகத்தினது மூதாதைகள் என்று பொதுவாகக் கூறப்படுகின்றது. இந்த ஜாதியாரது உடலெலும்புகளைப் பார்த்தால் மிஸ்டர் கிளாட்ஸ்டனின் எலும்புகள் என எவரும் நினைக்கக் கூடும். இவர்களது எலும்புகளிருந்த குகைக்கு அடுத்த குகையில் வேறு சில எலும்புகள் கிடைத்தன. இரண்டாவது குகையில் கிடைத்த எலும்பானது வில்லையும் அதிலிருந்து வீணை போன்ற கருவியையும் கண்டுபிடித்த "புஷ்மென்" என்ற ஜாதியாரது மூதாதைகளுடைய எலும்பென்று தெரியவருகிறது. கிரோமக்னன் ஜாதியாரும் இந்த கருப்பு மனிதர்களும் ஒருவருக்கொருவர் சம்பந்தமுடையவர்களென்பதற்குரிய அடையாளங்கள் வேறிடங்களில் கிடைத்திருக்கின்றன.

வட ஐரோப்பாவிலுள்ள ஜாதியார்கள் இவ்வுலகம் தோன்றிய காலத்திலிருந்தே தனித்து வாழ்ந்து வந்திருப்பதாகவும், குகைகளில் வசித்து வந்த ஐரோப்பிய நாகரிகமாக நாளடைவில் அபிவிருத்தி யடைந்ததென்றும் பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால் இது முற்றிலும் தவறான அபிப்பிராயமாகும். அம்மாதிரி நிகழவே இல்லை.

ஐரோப்பாவிலே குகைகளும் அதிகமாக இல்லை. மேலும் இங்கிருந்த குகைகளும் பலாட்டியாக உள்ள தனித்தனிக் குடும்பங்களால் கைப்பற்றிக் கொள்ளப் பட்டிருக்கும். ஐரோப்பாவில் குகையில் வசித்தவர்களும் அவர்களுக்குப் பிற்பட்டவர்களும் சமீபத்தில்தான் குடியேறியவர்களாவார்கள். இவர்கள ஆசியாவின் மத்திய பாகத்திலிருந்து வெளியே குடியேறிப் போக்கிரிகளுடையவும் துணிகரமான தன்மை வாய்ந்தவர்களுடையவும் சந்ததியார்கள்தான். ஐரோப்பாவை மூடியிருந்த பனிக் கட்டிகள் கடைசியாகக் கரைந்து போன பின்பே இவர்கள் வட ஐரோப்பாவில் நிரந்தரமாகக் குடியேற முடிந்தது. இவர்கள் தங்களது யாத்திரையின் பயனாக மத்திய ஆசியாவிலிருந்தவர்களைவிட நாகரிகத்திலும் ஜீவகாருண்யத் தன்மைகளிலும் குறைந்தவர்களாக இருந்தார்கள்.

இவர்கள் உலோகத்தாலான ஆயுதங்களைப் பெறுமுன்பு இவர்கள் மிருகங்களுடனும் ஆயிரக் கணக்கான வருஷங்களாகப் போராட வேண்டியிருந்தது. இவர்கள், போர் புரிவதற்கு வேண்டிய தன்மையைப் பழக்கிக், கொள்ள நேரிட்டது. இவர்களுக்கு உலோகத்தாலாகிய ஆயுதங்கள் கிடைக்குமுன்பு இவர்கள் ஒழுங்காகப் போர் புரிந்தனரென்றும் பிறரை அடிமைப் படுத்தினரென்றும் கூறக் கூடியதெதுவுமில்லை என்று தாம் கருதுவதாக டாக்டர் எலியட் கூறுகின்றார். மேலும் இவர்களுக்கு விவசாயம், சிற்பம், நாகரிகம் என்பன வற்றைப் பற்றிய வாசனையே தெரியாதிருந்தது. இவர்கள் காட்டு மிராண்டிகளாக விருந்தனர். ஆனால் மெஸபொடேமியா, அரேபியா, எகிப்தின் வடபாகம் இவற்றில் வசித்து வந்தவர்கள் விவசாயம், சிற்ப சாஸ்திரம், நாகரிகம், முதலிய துறைகளில் சிறிது சிறிதாக முன்னேறி வந்தனர். இவர்கள் வட ஐரோப்பாவில் வசித்தவர்களைக் காட்டிலும் நல்ல தன்மைகள் வாய்ந்தவராக இருந்தனர். வட ஐரோப்பா முதலிய விடங்களுக்குச் சென்றவர்களை விட இவர்கள் குறைவான ஜாதித் துவேஷமும் நிறத் துவேஷமுங் கொண்டிருந்தார்கள். இதனை நாம் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் நம்மிலுள்ள சிலரிடமும் காணலாம்.

வட ஐரோப்பா முதலிய விடங்களுக்குக் குடியேறிச்சென்றவர்களால் கிறிஸ்துவ மதம் ஏற்படவில்லை. அவர்கள் அம்மதத்தின் சாரத்தை இன்னும் எவ்விதத்திலும் கிரஹித்துக் கொள்ளவில்லை. வட ஐரோப்பாவில் வசித்தவர்கள் காட்டிலிருந்து வெளி வந்து உலகத்தவருடன் சம்பந்தம் வைத்துக் கொள்ள ஆரம்பித்த பொழுது அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் பல அம்சங்களில் உயர்ந்தவர்களாக இருப்பினும், மானிடருக்கு வேண்டிய மிகவும் அத்யாவசியமானதாயும் விரும்பத் தக்கதாயும் உள்ள அம்சங்களில் கருப்பு மனிதர்களை விடத் தாழ்ந்தவர்களாக இருந்தார்கள். தற்பொழுது வெள்ளையர்கள் வெள்ளையரல்லாதவரிடமிருந்து பல விஷயங்களை அறிந்து கொண்ட போதிலும் அவர்களுக்குச் சில முக்கியமான விஷயங்களில் தாழ்ந்தவர்களாக இருக்கின்றனர். சீனர்கள் புராதனமான நாகரிகமுடையவராக இருப்பதால் அவர்கள் மானிடரது சுபாவங்களை அறிந்து

சொல்லுவதில் சாமர்த்திய முள்ளவர்களாக இருக்கின்றனர். இதர ஜாதியாரை நடத்தும் முறையைப் பார்த்து அவர்களைப் பொதுவாக 'பிசாசுகள்' என்று சீனர்கள் அழைக்கின்றார்கள். ஐரோப்பிய நேசதேசத்தார், பீக்கிங்கிலுள்ள வசந்த மாளிகையை எரித்து நாசப்படுத்தினர். உயர்ந்த நாகரிகமுடையவரது கலா ஞானத்தை மெச்ச முடியாத தாழ்ந்த நாகரிகத்தினையுடையவர்கள் உயர்ந்த நாகரிகமுடையவரது கலைகளை அழிப்பதற்கு நமது ஆயுட் காலத்தில் நடந்த உதாரணங்களுள் இதுவும் ஒன்று.

வெள்ளையர்கள் தங்களுக்கு இயற்கையாகவே நியாய அநியாயத்தைத் தெரிந்து கொள்ள சக்தி இருக்கிறதென்று திருப்தி யடைந்து விடுகின்றார்கள். பிற ஜாதியார்களுக்குத் தங்களைப் போன்று நியாய புத்தியாவது கௌரவமாவது பூரணமாகக் கிடையாதென்று அறிந்து கொண்டிருந்த போதிலும் அவர்கள் தங்களது ஸ்திரீகளிடமே நியாயமான முறையில் நடந்து கொண்டதில்லை. நம்முடைய பெரிய பிரிட்டிஷ் நீதி ஸ்தலத்தார் ஒரு தேசிக்குச் சொந்தமான நிலமானது பிரிட்டிஷ் கம்பெனிக்குச் சொந்தமானதில்லை என்றால், அரசருக்குச் சொந்தமாக இருக்க வேண்டுமென்றும், அது சுதேசிகளுக்குச் சொந்தமானதல்லவென்றும் தீர்ப்புத்தான் கூறக்கூடும். நமது ஜாதியும் நமது அரசாங்கமும் இதுபோன்ற அநீதிகளையும் நியாயமென்று ஏற்றுக் கொள்ளுகின்றன. வெள்ளையர்கள் நியாயம் வழங்கக் கூடிய ஆற்றலும் புத்தியும் வாய்ந்தவர்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் மொத்தமாக நோக்கு மிடத்து வெள்ளைக்கார ஜாதிக்கு, சீனர்களைப் போன்றாவது அன்றி நீக்ரோவரைப் போன்றாவது எப்பொழுதும் நியாயம் வழங்கக் கூடிய புத்தி கிடையாது. வெள்ளையர்களுக்கு வெள்ளைய ரல்லாதவரிடத்தில் மிகுந்த துவேஷம் இருந்த போதிலும் அவர்களை நியாயம், காருண்யம், வைத்திய முறை, கணிதம், மதம், முதலியவை என்ன என்பதைப் பன்முறையும் எடுத்துப் போதித்திருக்கின்றார்கள்.

நிறத் துவேஷத்திற்கு அடிப்படையாக உள்ளது ஜாதித் துவேஷமேயாகும். ஜாதித் துவேஷம்தான் போட்டா போட்டியையும் சண்டைகளையும் உண்டாக்குகின்றது. ஆதிக்கம் செலுத்தும் ஜாதியார் ஜாதித் துவேஷங் கொண்டு தாங்கள் செய்யும் இறுமாப்பான காரியமனைத்தையும் நியாயமென்பர். தோல்வியடைந்தவர்களை ஜனங்கள் வெறுக்கின்றனர். அவர்களது அடிமைத் தனத்தை இகழ்கின்றனர். மேலும் தாங்களது அடக்கு முறைகள் நியாயமென்று தோற்றும்படி அவர்களது குணங்களை இழிவுபடுத்திக் கூறுகின்றனர். மனிதர்கள் பிறரை அடிமைப் படுத்திவிட்டு அவர்கள் வேறு ஜாதியாராயினும் சரி, அன்றி பெண் மக்களாயினும் சரி, அவர்களது அடிமைப்புத்தியைப் பற்றிக் குறை கூறி அவர்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்து கொள்ள லாயக்கற்றவர்கள் என்று பறை சாற்றுகின்றனர். அடிமைப்பட்டிருக்கிறவர்கள் போராடினால் அவர்களது எஜமானர்களாக உள்ளவர்கள் அவர்களைக் காட்டுமிராண்டிகளென்று அழைக்கின்றனர். அவ்வாறு

போராடுகின்றவர்கள் ஸ்திரீகளாக இருந்தால் அவர்களை பஜாரிகளென்று அழைக்கின்றனர். அவர்கள் வாதாடினால் அவர்களைச் சிறையிலிடுகின்றனர். தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை மீறி நடந்தால் அவர்கள் கலகஞ் செய்வதாகக் கூறி அவர்களை தேசப் பிரஷ்டஞ் செய்கின்றனர். வெடிகுண்டுகளை எறிந்து அவர்களின் குடிசைகளை நாசமாக்குகின்றார்கள். இக்கொடுமைக் கெல்லாம் எஞ்சியுள்ளவர்களைச் சிறையிலிட்டு சித்திர வதை செய்து தங்களது மன்னிப்பைப் பெற வேண்டுமானால் தாங்கள் செய்யும் களவு முதலியவற்றிற்கு உடந்தையாக இருக்க வேண்டுமென்று கூறுகின்றார்கள்.

நாம் எளிய ஜாதியார்களை எந்தத் தந்திரங்களையும் சாஸ்திர ஞானத்தையும் கொண்டு அடக்கி வைத்துக் கொண்டிருக்கின்றோமோ அந்தத் தந்திரங்களும் அறிவும் அவர்களாலும் அடையக்கூடியவைதான். ஆதலால் இவை நமக்குத்தான் இருக்கின்றன என்று நாம் இறுமாந்திருந்து அதனால் முடிவில் ஏமாற்றமடையாதிருப்போமாக. நாம் நம்முடைய உரிமைகளில் சிலவற்றை நமது ஸ்திரீகளுக்கு பரீக்ஷார்த்தமாகவேனும் அளிக்க நேரிட்டது. அவர்கள் மற்ற உரிமைகளையும் பெற முயன்றுகொண்டிருக்கிறார்கள். நமது ஸ்திரீகள் நம்மிடமிருந்து உரிமைகளைப் பெறக் கையாண்ட முறைகளையே உலகிலுள்ள வெள்ளையரல்லாதவர்களெல்லாம் கையாள யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களது முயற்சியில் வெற்றியுற முடியாதென்று கருதுவது பயன்படா தொழிலும். அவர்கள் ஏற்கனவே தங்களது முயற்சியைச் செய்து வருகின்றார்கள். நமது எண்ணங்களையும் புத்தியையும் கெடுத்து வருகின்ற ஜாதித் துவேஷத்தையும் நிறத் துவேஷத்தையும் நாம் நீக்கிக்கொள்ள வேண்டியது மெத்த அவசியமானது.

(காண்டம்பாரி ரெவ்யு)

உலகத்தை எவனொருவன் பயமுறுத்துகிறானோ அவன் உலகத்தினாலே பரிகசிக்கப் படுகிறான்.

—டாக்டர் ஜான்ஸன்

சமாதானத்திற்கு வழி என்ன?

உண்மை ஒரு காலத்திலு மில்லாது போவதில்லை. காலத்தினாலும், அக்காலத்தினால் ஏற்படும் மாறுதல்களினாலும் அதை அழிக்க முடியாது. அதுமட்டுமா? தாழ்ந்த உலோகங்கள் போன்று காலத்தினால் களிம்புபடிவதுமில்லை. பண்டைக் காலந் தொட்டு பாரத நாட்டு முனிவர்களும், இருடிகளும் மனிதனின் உள்ளத்தில் நிலைபெற்று விளங்கும் பொன்மய சொரூபியைப் பற்றிக் கூறி யிருக்கின்றனர். பொன், தூசிபடிந்து குப்பையில் கிடக்கலாம்; ஆனால் அது எப்பொழுதும், தனது இயற்கைச் சுபாவத்துக் கேற்ப, சுத்தமாயும் பிரகாசம் பொருந்தியதாகவு மிருக்கும். உண்மையின் சுபாவமும் அத்தகையதுதான். அதை அனுபவத்தினால்தான் உணரவேண்டும்; அதை விட வேறொரு வழியாலும் அறிய முடியாது. சமாதானமும் சத்தியத்தைப் போன்றது; அது நாம் உணரவேண்டிய தொன்று; உணர்ந்த பின் நம்மிடமிருந்து பிறர் உணர்ந்து கொள்ளக் கூடிய தன்மையை யுடையது. ஒரு மனிதனுக்கு சாந்தி நிறைந்த இதயமில்லாவிடின், அவனால் மனமாரக் கடவுளுக்குப் பிரார்த்தனை செய்யமுடியாது; அவன் பிறருக்குஞ் சாந்தியை யளிக்கமாட்டான்.

• • •

பல ஆண்டுகளாக சாந்தி மந்திரத்தை நான் உங்களுக்கு எடுத்துக் கூறி யிருக்கின்றேன். இந்த ஆசிர்வாதத்தை, ஆத்மானுபவமும் அறிவும் முதிர்ந்த பெரியோர்களிட மிருந்து நாம் பெற்றோம். பலர் அதைக் கேட்டு, அதன் சிறப்பையும், உயர்ந்த இலட்சியத்தையும் மெச்சி, மனனம் பண்ணி வந்தனர். நாம் அந்தக் காரியத்தில் சித்தியடைய முயல்கின்றோமோ? அக்காரியத்தைப் பற்றி சதா காலமும் சிந்தித்து, தினசரி வாழ்வில் அதைப் பயின்று வருதல் வேண்டும்.

•

"சாந்தி, சமாதானம் என்று இனிய பாடல்களைப் பாடி வழிபட்டு வந்தால், அதன் மூலம் உலக வியவகாரங்களைச் சீர்ப்படுத்தி விடலாமா? பாரமார்த்திக ஆதாரங்கள் உலக விஷயங்களில் சித்தியளிப்பது எங்ஙனம்? தவிரவும் இது ஒரு பழைய காலத்துக் கொள்கையல்லவா?" என்று பலர் கேட்கலாம். அவர்களுக்கும் சமாதானங் கூறி விடுகின்றேன். ஒரு பொருள், அதன் புதுமை காரணமாக, மிகுந்த மதிப்பைப் பெறுவதில்லை. அதற்கு நேர் மாறாக, பல முறை பரிக்ஷித்துப் பார்த்து உண்மைப் பொருள் என்று கை கண்டவற்றையே உண்மைப் பொருளெனக் கருதுகின்றோம். ஒரே நோக்கம், ஒரே சிந்தனை, ஒரே இலட்சியம் என்பனவற்றை வாழ்வில் கடைப்பிடித் தொழுகியவர்களே மஹா புருஷர்களாவர். இத்தகைய மஹானுபாவர்கள், கால, தேசவர்த்தமானங்களினால் மாறாத இயல்பையுடைய சமாதான நெறி நின்றே ஒழுகி வந்தனர். சண்டை சச்சரவுகள் நிறைந்த தற்கால உலகத்

திலும், பல அறிஞர்கள் சமாதானத்தை நிறுவ முயலுகின்றனர்.

இந்தச் சமாதானத்தை நாம் நமது வாழ்வில் எவ்வாறு அனுபவிக்கலாம்? மனிதனுக்கும் கடவுளுக்கு மிடையேயுள்ள தாரதம்மியம் மிகப் பெரிது; அந்த வித்தியாசத்தை யொழிப்பதற்கு நமது தினசரி வாழ்க்கையில் ஒருவித தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இந்தத் தொடர்பை புத்தக அறிவினாலோ, அல்லது மதிநுட்பத்தினாலோ ஏற்படுத்த முடியாது. தங்கள் இதயங்களில் சமாதானத்தை உணர்ந்த தீர்க்கதரிசிகளே அத்தகைய தொடர்பை ஏற்படுத்த வல்லவர்.

ஒவ்வொரு மனிதனும் சாந்தியை அடைய வேண்டும். அவன் அடைந்த பின்னரே பிறருக்கு அதை அளிக்க முடியும். இதைக் கேட்டவுடன் நான் சுயநலத்தைப் போதிப்பதாகக் கருதிவிடக் கூடாது. சில ஆஷாடபூதிகள் "எனக்காக ஒன்றுமே வேண்டியதில்லை" என்று பல்லவி பாடுவது வழக்கம். ஆனால் நம்மிடம் இருக்கும் பொருளைத் தானே பிறருக்குக் கொடுக்க முடியும். ஒருவனுக்கு உலக நன்மைக்காக உழைப்பதற்கு விருப்பமிருந்த போதிலும், அவன் அமைதியின்றி உள்ளவனாயிருப்பின், அவனால் என்ன செய்யமுடியும்? நாம் வருந்தும் மக்களிடம் அனுதாபங் காட்டலாம்; ஆனால் அவர்களோடு கூடி நாமும் அழுது அரற்றுவதால் அம்மனிதனுக்கு ஏதாவது நன்மையுண்டாகுமா? ஆனால், எவனொருவன் அவர்களுக்குப் புறம்பாயிருந்து, அவர்களுடைய இன்னல்களைத் தீர்க்கவோ, அல்லது தடுக்கவோ, முயற்சி செய்கின்றானோ அவனே வீரனாகின்றான்.

மேல்நாட்டார் கீழ்நாட்டு மக்களைப் பகல் கனவு காண்போர் என்று கூறுவது வழக்கம். ஆனால், அத்தகையோரே உண்மையனுபவம் நிரம்பப் பெற்றவராயிருக்கின்றனர். எத்தனை இடுக்கண்கள் உற்ற போதிலும், அவர்களுடைய மனோ நிம்மதியானது சற்றும் தழும்பாது. இயேசு கிறிஸ்துநாதரைப் பாருங்கள். அவர் தமது சீடருக்குக் காட்டிய முன் யாதிரியைப் பற்றிச் சிந்தியுங்கள். அவருடைய எதிரிகள் அவரை அணுகியதும் சீடர்கள் வாளையுருவி எதிரிகளைத் தாக்க முயன்றனர். ஆனால் இயேசுநாதரோ அவர்களை அப்படிச் செய்ய வேண்டாமென்று தடுத்தார். உலக ஞானத்தைக் கொண்டு சீடர்கள் இயேசுநாதரைக் காப்பாற்ற முயன்றனர். அவர்களுடைய புயவலியால் தனக்கு ஒருவித உதவியும் அவர்களால் செய்ய முடியாதெனக் கூறி தெய்வத்தினிடம் சரணாகதியடைந்தார்.

இப்போதனையை நாம் ஆராய்ந்து பார்த்தால் இவ்வுலக வாழ்வுக்குப் பொருத்த மற்றதாய் நமக்குத் தோன்றும். ஆயினும் "வாளினால் வசிப்பவன் வாளினால் மடிவான்" என்னும் அழியா உண்மை அதனுள் பொதிந்து கிடக்கின்றது. மனித வர்க்கத்தின் மீது பேரன்பு பூண்ட மஹா புருஷர்கள் பலர் சமாதான இலட்சியத்துக்குத் தகுந்த அடிப்படையைக் காண முயலுகின்றனர்; ஆனால் மனிதன் லோகாயத உணர்ச்சியே உண்மையென்று கருதுவதால் அவர்களுடைய முயற்சி யெல்லம் தடைப் படுகின்

றது. மனிதனின் மனதில் யுத்தத்தைப் பற்றி எண்ண மிருக்கும் வரையும் அது காரணமாக ஏற்படும் பொல்லாங்குகளையும் ஒழிக்க முடியாது. ஆகையினாலே தான் புத்த பகவான் 'பகையைப் பகையால் வெல்ல முடியாது; அன்பு ஒன்றினால் மட்டுமே அதைவெல்லலாம். இதேசநாதனநீதி' எனத் தர்மோபதேசஞ் செய்தார். இந்த நீதியைத்தான் புதிதாகக் கண்டு பிடித்ததாகப் பகவான் கூறவில்லை. "சென்ற காலத்திலிருந்து வந்ததுமப்படியே; இனிமேலிருக்கப் போவதுமப்படியே" எனக் கூறி யிருக்கின்றார்.

சண்டை, சச்சரவுகள் மலிந்த தற்கால உலகத்தில் புத்த பகவானின் பொன்மொழிகள் அவசியம் தேவைப் படுகின்றன. தம்மபதம் என்னும் பௌத்த நூலிலிருந்து சில போதனைகளை ஈண்டு எடுத்துக் கூறுகின்றோம்.

"நமது பகைவரைப் பகையாதிருப்போமாயின், நாம் இன்பவாழ்வு எய்தலாம். ஆகையால் நமது பகைவரின் மத்தியில் பகைநீங்கியிருப்போமாக!"

இம்மொழிகளைக் கேட்டவுடன் "இது சத்தியயுகத்துக் கொள்கை; தற்காலத்துக்குப் பொருத்தமானதல்ல" என்று நீங்கள் கூறலாம். அப்படியாயின் நமது தற்கால உலகத்தில் சத்தியயுகத்தை நிறுவுவதற்கு முயற்சி செய்வோமாக!

"வருத்துவாரிடையே, வருத்தம் நீங்கி யிருப்போமாயின், நாம் இன்ப வாழ்வு எய்தலாம். ஆகையால் வருந்தும் மக்களிடையே, வருத்த மொழிந்து வாழ்வோமாக!"

பேராவலுடையோரின் மத்தியில், அவா நீக்கி வாழ்வோமாயின், நாம் இன்பவாழ் வெய்தலாம். ஆகையால் அவாவுடையோ ரிடையே; அவா வற்று வாழ்வோமாக!

"நம்முடைய தென்று சொல்லக் கூடிய ஒரு பொருளு மில்லாதிருப்போமாயின், நாம் இன்பவாழ்வு எய்தலாம்! அப்பொழுதுதான் இன்பத்தையே புசிக்கும் ஒளிமயமான தேவர்கள் போன்று நாம் வாழலாம்."

அதி அற்புதமான எண்ணங்களல்லவா இவை? இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் புத்த பகவான் கூறியபோதும், காலத்தினால் வேறுபடாத உண்மைகளாக அவை விளங்கு கின்றன. இப்போதனைகள், மனிதவர்க்கத்தின் சீரிய வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப் படுகின்றன இவற்றை ஆதாரமாகக் கொண்டு தற்கால நாகரிக முள்ள மனிதருக்குப் பொருத்தமான நீதி நெறி முறையை ஸ்தாபிக்க முடியுமென்பது எமது துணிபு.

தற்காலத்து மனிதரை நாகரிக முள்ளவர் என்று கூறுவது பொருத்தமாயில்லை. பகை, அவா என்பனவற்றை வென்றவனே நாகரிக முள்ளான். அவனிடம் ஒரு பிரஞை தோன்றுகின்றது; நிலக்கண்ணாடியில் உனது முகம் தெளிவாகத் தெரிவது போன்று அவனுடைய பிரஞை

யானது பிரகாசிக்கின்றது. சித்திரக்காரர், புலவர் மட்டுமன்றி ஏனையோரும் அத்தகைய மனிதனுக்குச் சன்மானங் கொடுக்கின்றனர். அவனுடைய மனமும் வாக்கும், உள்ளும் புறமும் ஒரே தன்மையை யுடையன. ஒரு தீவிர புத்தியுடையவனைக் கண்டால் "அவன் மகாகெட்டிக்காரன்" எனக் கூறுகின்றோம்; ஆனால் வெள்ளை மனமுடைய ஒருவனைப் பார்த்தவுடன் "எவ்வளவு அழகுடையன் இவன்" என அவனை வியந்து கூறுகின்றோம். அவனைக் கண்டவுடன் நமக்கு அந்நிய பாவம் ஒழிந்து சகோதர பாவம் ஏற்படுகின்றது. "இவனைப் போன்று எல்லா மனிதருமிருப்பின் இவ்வுலகம் எவ்வளவு அழகு பொருந்தி யிருக்கும்" என்று நாம் எண்ணுகின்றோம்.

ஒவ்வொரு மனிதனும் தனித் தனியாக்க கற்றுத் தேர்ச்சி பெற வேண்டும். தனிப்பட்ட மனிதன் முன்னேற்ற மடைந்தால்தான் மனித சமுதாயம் முன்னேற்றமடையும். இதைப் பார்த்தால் மிகவும் பிரமாண்டமான வேலை போல் தோற்றும். ஆனால் பிழையான வழியில் தொடர்ந்து செல்வதைப் பார்க்கிலும், புதிய வழியில் முயற்சி செய்வது விசேஷமல்லவா? புராதன கொள்கையாயிற்றே; ஆகையால் அது தற்காலத்துக்கு ஏற்றதல்ல என்று புறக்கணித்து விடாதீர்கள். அதைத் திருத்தியமைப்பவர் யாவர்? தேவலோகத்திலிருந்து தேவாதி தேவன் வந்து உங்களுக்கு எல்லாவற்றையுஞ் சீர்படுத்துவா ரென்று எதிர்பார்க்கின்றீர்களா? அவர் வந்தாலும் நாங்கள் அவருடைய வார்த்தையை செவிசாய்த்துக் கேட்போமா? இயேசு நாதரின் வார்த்தைகளைப் பாலைவனத்து ஒலி யென்று மனிதர் கூறவில்லையா? அத்தேவ குமாரனாலும் மனிதனின் கவனத்தைக் கவர முடியாமல் போயிற்று. நம்முள் எத்தனை பேர் சத்திய வாசகத்தைக் கூர்ந்து கேட்கத் தகுதியுடையரா யிருக்கின்றனர்! உண்மைப் பொருளை, கிறிஸ்து வென்றோ, புத்தரென்றோ கூறுங்கள். நீங்கள் எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் உண்மை ஒன்றுதான். அது ஒரு சிறு வினையுள் அடங்கியுள்ளதல்ல; ஒரு தனிப்பட்ட மனிதன் சொத்துமல்ல. உள்ளும் புறமும் வேற்றுமைகளை யொழித்தவர்களும், மனத் தூய்மை யுடையவர்களும் உண்மையை உணருவதற்கு அருகராவர்.

சேற்று நீர் சூரியனின் ஒளியைப் பிரதிபிம்பிக்கச்செய்யாது. தண்ணீரில் சேறு கலந்த காரணம் பற்றி, தண்ணீரின் பிரதிபிம்பிக்குஞ் சக்தி அழிந்து போய் விட்டது. ஆனால் சேறு கலப்பதற்குச் சற்று நேரத்துக்கு முன், சூரியனின் பிரதிபிம்பத்தை தண்ணீரில் கண்டிருக்கலாம். மனிதனின் இருதயமும் இத்தகையதுதான். அஞ்ஞானமாகிய இருளினால் மூடப்பட்டு, அமைதியீனமாகிய அலைகளினால் கலக்கப்பட்ட இதயமும் உண்மையின் ஒளியைப் பிரதிபிம்பிக்கும் ஆற்றலை இழந்து விடுகின்றது. சில வேளைகளில் நமக்கு நாமே பகைவர்களாகின்றோம். உலகிலுள்ள அமைதியீனத்தையும், மக்களிடையேயுள்ள பகையையும் பற்றிப் பிரமாதமாக நாம் எடுத்துப் பேசுகின்றோம். ஆனால் இந்த அமைதியீனத்துக்கும், பகைக்கும் மூலகாரணம் எங்கே யிருக்கின்றது? இந்தக்

கொடிய எண்ணங்களைச் சிந்திப்பவர்களும் நம்மைப் போன்ற மனிதர்களே யாவர். அழகு, சாந்தம் என்பனவற்றின் ஊற்றையடைவதும் நம்மைப் போன்ற மனிதர்கள்தான்.

சமாதானத்தை யடையும் பாதை யானது நமக்கு எப்பொழுதும் திறந்தபடியே யிருக்கின்றது; ஆனால் அது அநுபவத்தில் முடியாத காரியமென்று நாம் தீர்மானஞ் செய்து விட்டோம். போதகர்களும் இப்பாதை இந்தக் காலத்தில் முடியாத காரியம் என்று அபிப்பிராயப் படுகின்றனர். இத்தகைய மனப்பான்மையைப் பார்த்து நாம் மனம் வருந்த வேண்டியிருக்கின்றது. ஒரு வழியில் பிரயத்தனஞ் செய்து பரீக்ஷித்துப்பாராமல், அதைப் பிரயோசனமற்றதென்று எப்படித் தள்ளி விடலாம். ஒரு வனாந்தரத்தில் ஒரு பொற் சுரங்க மிருக்கிறதாகக் கேள்விப்பட்டால், ஆயிரக் கணக்கான மக்கள், உயிரையுந் துரும்பென மதித்து, அதைத் தேட முயலுகின்றனர். ஆனால் எவனொருவன் வந்து "கடவுள், சாந்தம், சமாதானம் என்பவற்றை யடையும் மார்க்கத்தை உங்களுக்குக் காட்டுகிறேன்" என்று அழைக்கிறானோ, அவனுடைய வார்த்தைகளுக்கு நாம் செவி சாய்க்கின்றோமில்லை.

உங்களுடைய உற்சாகத்தைக் குறைப்பதற்காக நான் இவற்றைக் கூறவில்லை. உங்களை ஊக்கப் படுத்தி உங்களுடைய ஆற்றல்களை ஸ்திரப் படுத்துவதே எனது நோக்கம். ஒவ்வொரு மனிதனுள்ளும் இயங்குஞ் சக்தி தெய்விக சக்திதான். எல்லா மனிதரும், அவர்கள் எங்கே வசித்தாலுஞ் சரி, அல்லது எந்தச் சாதி, மதம் அந்தஸ்தைச் சேர்ந்தவர்களாயினுஞ் சரி, அந்தத் தெய்வப் பொறியை உட்கொண்டிருக்கின்றனர். இந்தக் கொள்கையானது நமது எண்ணங்களை ஒரு படி உயரச் செய்கின்றது. அந்த உயர்ந்த நிலையில் நாம் வேண்டுவது யாதொன்று மில்லை.

சில ஆண்டுகளுக்கு முன் ஒரு சம்பவம் நடந்தது. ஒரு புருஷனும் மனைவியும் நன்றாய் மதுபானங் குடித்து விட்டு மோட்டார் சவாரி செய்தார்கள். புருஷன் ரதத்தை (மோட்டார்காரை) மிக விரைவாகப் பிழையான பக்கத்தில் செலுத்திக் கொண்டு போனான். சடுதியாக ரதம் (கார்) ஒரு தீப ஸ்தம்பத்தில் மோதிச் சிதறுபடியாயிற்று. மதுபான மயக்கத்திலிருந்த புருஷனுக்கு மோட்டார் ரதம் (கார்) கவிழ்ந்து சிதறுபடியானதும் புரியவில்லை. இச்சம்பவத்தின் அபாயகரமான நிலையை யுணர்ந்த மனைவி, புருஷனின் கன்னத்தில் புடைத்தாள். அப்பொழுதுதான் அவன் சற்று உணர்ச்சி பெற்று எழுந்தான். இச்சம்பவத்தை, சிரிக்கத் தக்க காரியம் என்று நாம் புறக்கணித்துவிடக் கூடாது. தன்னடக்கமில்லாமை அல்லற் படுத்தும் என்னும் உண்மையானது இந்த சம்பவத்திலிருந்து நமக்குத் தெரிய வருகின்றது. மனிதன் தனது மனதை அடக்கியாள்வதற்குச் சக்தியில்லாத காரணத்தினாலேதான் உலகில் பித்தலாட்டங்களும், பகையும், அவாவும் மலிந்திருக்கின்றன.

மஹா புருஷர்கள் சமாதானத்தைப் பற்றிச் சிந்திக்கின்றனர். நீங்களும்

அவர்களுடைய சிந்தனையில் பங்கு கொள்ளுங்கள். உங்கள் பிரார்த்தனைகளின்மூலம் அவர்களுக்கு நீங்கள் உதவி செய்யலாம். சிறுமை, சுயநலம் என்னும் பகைவர்களை உங்கள் மனக்கோட்டைக்குள் உட்செல்லாதபடி பாதுகாப்பீர்களாயின் நீங்கள் மிகவும் ஆற்றல் படைத்தவர்களாவீர்கள். உங்களுடைய ஆற்றலானது ஒரு நதிப் பிரவாகம் போன்று கரைபுரண்டு சென்று மக்களுடைய இதயங்களைப் புனிதமாக்கும். ஆத்மீக ஞான ஸ்நானத்துக்கு இதுதான் ஒரே ஒரு வழி. மக்களின் இதயங்களிலிருந்து ஆத்மீகக் கனல் வெளிப்படுமாயின், அது பல அற்புதங்களைச் செய்யும். அவா, வாஞ்சை என்னுஞ் சிறு நெருப்புச் சுடர்களை, ஆத்மீகக் கனலாகிய பெருஞ் சுடரால் அவிக்க வேண்டும். இதைத் தவிர்த்து நாம் எவ்வளவு முயன்றாலும் பிரயோஜனமில்லை. உலக சங்கடங்களை உலகத்துக் கப்பாலுள்ள தெய்வீக ஆற்றலைக் கொண்டே வெல்லல் வேண்டும்.

நான் கூறுவதைப்பற்றி நீங்கள் சந்தேகிக்கலாம்; ஆனால் அதை என்னால் தடுக்க முடியாது. சாதிக்கக் கூடிய எதற்கும் சந்தேகம் வந்தே தீரும். புத்த பகவான், கிறிஸ்து நாதர் என்பவர்களுடைய கொள்கைகளைப் பற்றிச் சந்தேகம் எழவில்லையா? நமது காந்தி மகாத்மாவைத்தான் பாருங்கள். அவருடைய கொள்கைகளைப்பற்றி தொடக்கத்தில் சந்தேகப்படாதார் யார்? அப்படியிருந்தும் அவருடைய கொள்கைகளை அவர் ஒருபோதும் கைவிடவில்லை. இப்படிப்பட்ட பிடிவாதமுள்ள மனிதர் மனித சமுதாயத்திடையே தோன்றுவது பெரும் பாக்கியமென்றே கூற வேண்டும். அவர்களே செயற்கருஞ் செயல்களைச் செய்பவர்கள். தங்களுடைய உள்ளத்திலிருந்து எழும் உறுதியைக் கொண்டு எதையுஞ் சாதிக்கவல்லவர்கள். மனித வர்க்கம் தங்களைப் பின்தொடர முடியாமலிருப்பதைக் கண்டு அவர்கள் ஒருபோதும் அஞ்சுவதில்லை. அத்தகையோர், எத்தகைய இடுக்கண்வரினும் சகித்து, தமது நெறிநின்றொழுகுவர். அவர்கள் தமது இலட்சியத்தைப் பிறருக்கு விளக்கப்படுத்தி, அதன்மூலம் மக்களை உய்விப்பதற்குத் தங்கள் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணஞ் செய்கின்றனர்.

“முதலாவதாக நீ சமாதானத்தில் நிலை பெற்று நில்; அப்பொழுதுதான் நீ பிறரையுஞ் சமாதானத்தில் நிலை பெறச் செய்ய முடியும்” என்று தோமாஸ் கெம்பிஸ் என்னும் கிறிஸ்தவ ஞானியார் கூறியிருக்கின்றார். இவ் வார்த்தைகளில் நிறைந்த உண்மை பொதிந்து கிடக்கின்றது. நீ சமாதானத்தை அடைய முயல்வாயாயின் நீ பாக்கியசாலியாவாய்; அதைக் கண்டுபிடிப்பதற்கு வேண்டிய வழி உன்னுள்ளேதான் அடங்கியிருக்கின்றது. உலகின் அமைதியீனத்தைக் கண்டு சண்டையிடாதே; “உலகில் சமாதானமில்லாத காரணத்தினாலேதான் என் மனதிலும் முரண்பாடு ஏற்படுகின்றது” என்று கூறவும் வேண்டாம். நீ உண்மையான சமாதானத்தில் நிலைபெற்று நிற்பாயாயின், உன்மூலம் உலகமும் சமாதானத்தையடையும்.

சிற் சில சமயங்களில் உனக்குத் துன்பம் ஏற்படுகின்றது; அத்தரு

ணங்களில் கடவுளில்லை யென்றே நீ நினைத்து விடுகின்றாய் உனக்கு ஆறுதல் வேண்டிய நேரத்தில், ஆறுதலை யளிக்கத் தக்கவராகிய ஆண்டவனை, தக்க தொடர்பில்லாத காரணத்தினாலே இழந்து விடுகின்றாய். இதற்குக் காரணம் உனது இதயத்தில் அமைதி யில்லாமையே யாகும். இப்படிப்பட்ட உதவியற்ற நிலைமை உனது சீவியகாலத்தில் பல முறை ஏற்படும்; ஆனால், உன்னிடத்தே யுள்ள தெய்வப் பொறியை நீதான் வளர்க்கவேண்டும் என்பதை நன்றாய் உணரவேண்டும். உன்னையும் பிறரையுங் காப்பாற்றக்கூடிய ஆற்றலையும் நீயே சம்பாதித்தாக வேண்டும். படிப்படியாக இத்துறையில் பிரயாசப்படுவாயாயின், நமது ஆன்றோரளித்த அன்பு நெறி, சமாதானநெறி என்பனவற்றின் பெருமை உனக்கு நன்கு புலப்படும். இவை இந்திய நாட்டுக் கொள்கைகள் மட்டுமன்றி, எல்லாத் தேசங்களுக்கும், சதாகாலத்துக்கும் பொதுப்படையான கொள்கைகளாகும். பிறருக்கு விரோதமாக ஒன்றும் நினைக்க மாட்டேனென்று உறுதியாகத் தீர்மானஞ் செய்துகொள். இத்தீர்மானமே சமாதான நெறிக்கு முதற்படி. இதைத் தினந்தோறும் அரைமணித் தியானமேனும் சிந்தனை செய். காலாந்திரத்தில் உனது இதயத்தில் ஒரு சக்தி ஏற்படுவதை நீ உணருவாய். "எவ்வுயிரும் இன்புறுவதாக! எவ்வுயிரும் சமாதான மடைவதாக!" என்னும் மங்களமான எண்ணங்களை உனது சிந்தனை சக்தியினால் உலகெங்கும் பாய்ச்சு. இப்படிப்பயின்று வருவாயாயின் நீ மகா வெற்றி வீரனாவாய்; உனது உணர்ச்சியானது ஆகாசம் போலப் பரந்துவிடும்; உனது இதயத்திலும் ஒரு புது மணங் கமழும்; ஒரு புதிய இன்பம் பிறக்கும். உலகமக்க ளெல்லாரும் ஒரு குலமெனக்கருதி அன்பு செய்து, அதனாலேற்படும் தெவிட்டாத இன்பத்தை உனது வாழ்நாளில் எப்போதாவது அநுபவித்திருக்கின்றாயா? உலகம் முழுவதும் உனது வீடு. இந்த எண்ணத்தை ஸ்திரப்படுத்தி, நன்கு உணருவாயாயின் நீ ஒரு பெரிய நீதி நெறி நின்றொழுகியவனாவாய்; உயர் வாழ்வை விரும்பி, அதை யடைவதற்குப் பிரயாசைப்படும் மக்களுக்கும் ஒரு புது வாழ்க்கை நெறியைக் காட்டக்கூடியவனாயிருப்பாய்.

இது அநுபவத்தில் முடியாத காரியம் போல உனக்குத் தோன்றலாம். செய்தற்கரிய எந்தக் காரியத்தையும் இயலாத காரியம் என்று சொல்லுவது நமது வழக்கம்; ஆனால் ஏதோ ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்று நாம் விரும்பினால் அதைச் செய்வதற்கு ஒரு சாட்டுக் கண்டு பிடித்து விடுவோம். நாம் சமாதானத்தை யடைவதற்கு நாமே பாடுபட்டு உழைக்க வேண்டும். உனது இதயத்தில் அடங்கியுள்ள பூரண சாந்தியானது உன்னுடைய சொந்தப் பொருளே யாகும்; ஆகையால் நீ அதை மழை போல் வழங்கலாம்; தாராள மனத்துடன் யாவருக்கும் அதைப் பகிர்ந்து கொடு.

உலகின் பல பாகங்களிலும் வசிக்கும் மக்களெல்லோரும் சமாதானத்தைப் பற்றிச் சிந்திப்பார்களாக! மானிட சமுதாயத்துக்கு சமாதானமளிக்கக் கூடிய சமரச எண்ணங்

களைக் கைக் கொள்வார்களாக! இத்தகைய எண்ணங்களானது, வெண்கொற்றக் குடை போல் விரிந்து, பார்த்த நாற்றிசையிலும் சமாதானத்தைக் நிறுவும். தற்சமயம் இது ஒரு பகற் கனவு போல் தோன்றும், ஆனால் இத்துறையில் நாம் முயன்றோமாயின், காலாந்தரத்தில் அது நனவாவது திண்ணம்.

சில வேளை நான் பயித்யக்காரனைப் போன்று பேசுவதாக உங்களுக்குத் தோன்றலாம். உலகம் தற்போதுள்ள நிலைமையில் இத் தீர்க்க தரிசனம் தேவையற்றதாகத் தோன்றலாம். ஆனால் நான் அதில் முழு விசுவாச முடையேன். மாயையைப் பற்றிய கொள்கை இந்தியாவிலேதான் பிறந்தது. இந்த உலகமானது நிலையற்றது; அது நிலையாயு முள்ளது; அது சதா காலமும் மாறும் இயல்பையுடையது. சில ஆண்டுகளுக்கு முன்னே நாம் செய்த செயல்களில் பலவற்றை நாம் மறந்து விடுகின்றோம். நமக்கு ஞாபகமா யிருக்கின்ற சம்பவங்களிலும் சிலவற்றை நாம் மறந்துவிட விரும்புகின்றோம். இவையெல்லாம் உண்மைப் பொருளல்ல; இவை தோன்றிமறையும் இயல்பையுடையன. சத்தியமானதும், நிரந்தரமானதும் ஆகிய அழியாப்பொருள் நம்மிடத்துண்டு. ஆகையினாலே நமது இதயங்களை சத்தியத்தின் மீது செலுத்தி சாந்தியும் சமாதானமும் அடைவோமாக! தங்கம் போன்று எக்காலமும் களிப்புபடியாது ஒளிரும் நம் உள்ளொளியின் மீதுள்ள விசுவாசத்தைப் பொன் போன்று போற்றுவோமாக! (பரமானந்தர்)

உலகத்துப் பெரிய நகரங்களில் சில

பெயர்	எந்த நாட்டில்	ஜனத்தொகை
லண்டன்	இங்கிலாந்து	8,202,818
நியூயார்க்	அமெரிக்கா	7,075,000
டோக்கியோ	ஜப்பான்	5,312,000
பெர்லின்	ஜெர்மனி	4,025,000
சிக்காகோ	அமெரிக்கா	3,380,000
பாரிஸ்	பிரான்ஸ்	2,891,020
லெனின்கிராட்	ருஷ்யா	2,783,600
ஒஸாகா	ஜப்பான்	2,586,300
மாஸ்கோ	ருஷ்யா	2,420,000
மாட்ரிட்	ஸ்பெயின்	993,646
பாங்காக்	சையாம்	902,930
சிங்கப்பூர்	மலேயா	557,745

—"தமிழ் மகன்"

பண்டைக்காலத்திய தண்டனைகள்

தற்கால நாகரீக உலகத்தில் ஒருவன் கொலைக் குற்றஞ் செய்வானாயின் அவனுக்கு நமது நாடுகளில் தூக்குத் தண்டனையும், அமெரிக்காவில் மின்சார நாற்காலித் தண்டனையும் விதிக்கப்படுகின்றன. இந்தியனாயினும் அமெரிக்கனாயினும் குற்றம் கொலைக் குற்றமே. ஆனால் இந்தியன் கழுத்தில் கயிறு மாட்டப்பட்டு அவன் சிறிது நேரம் மூச்சுத் திணறி மரண வேதனையை அனுபவித்த பின்னரே இறக்கிறான். ஆனால் அமெரிக்கனோ மின்சார இயந்திரத்தோடு இணைக்கப் பெற்ற ஒரு நாற்காலியில் போய் அமர்ந்து கொள்கிறான். எதிரில் நிற்கும் அதிகாரி அவனை நோக்கி உனது இறுதி விருப்பம் என்னவென்று கேட்கிறார். அவன் தனது விருப்பத்தைத் தெரிவிக்கிறான். உடனே மின்சார பொத்தான், அமுக்கப்படுகிறது. இமைப்பொழுதில் அவன்பிராணன் யாதொரு வேதனையுமின்றி உடலை விட்டுப் பிரிந்து விடுகிறது.

உயிருடன் புதைத்துவிடும் கொடுமை.

பண்டைக் காலத்தில் என்னென்ன குற்றங்களுக்கு மரண தண்டனை விதித்தார்கள்? அத்தண்டனைகள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டன? அக்காலத்தில் மரண தண்டனையை விட இக்காலத்திய தண்டனை முன்னேறி யிருக்கிறதா? என்பவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பண்டைக் காலத்தில் அதாவது உலக சரித்திரம் எழுதப்பட்டதற்கு முந்திய காலத்தில், தண்டனைகள் மிக மிகக் கடுமையாக விருந்தன. உதாரணமாக தம் கணவன்மார்களுக்குத் துரோகம் செய்து அயலானோடு சோர நட்புக் கொள்ளும் பெண்கள் அக்காலத்தில் உயிருடன் குழி தோண்டி புதைக்கப்பட்டனர் என நாம் சரித்திரங்கள் வாயிலாக அறிகிறோம். ரோமர்களிடையேயும் பெண்களுக்கு இத்தகைய தண்டனை விதிக்கப்பட்டு வந்தது. வெஸ்டாஸ் என்னும் தெய்வத்துக்கு அக்காலத்தில் ரோம கன்னிகைகள் அர்ப்பணம் செய்யப்படுவது வழக்கம். அவ்விடத்தில் ஆடவர்கள் பிரவேசிக்கக் கூடாதென்ற கட்டுப்பாடும் இருந்தது. அக்கன்னிகைகள் ஆயுட்காலம் முழுவதும் கன்னிகைகளாகவே யிருத்தல் வேண்டும். இக்கட்டுப்பாட்டை மீறி புருஷர்களோடு சம்பந்தம் வைத்துக் கொண்டதாக ரோம சக்ரவர்த்திக்குத் தெரியவந்தால் உடனே அப்பெண்ணை உயிருடன் புதைத்து விடுமாறு தீர்ப்பளிக்கப்படும். இத்தகைய கொடுந் தண்டனையை மேற் கூறப்பட்ட கன்னிகைகளில் பலர் அனுபவித்திருக்கிறார்கள்.

நீரில் ஆழ்த்திவிடும் நீசத்தனம்.

இரண்டாவதாக, நீரில் ஆழ்த்தி மரணத்தை விளைவிக்கும் தண்டனை

யும் பண்டைக் காலத்தில் விதிக்கப்பட்டதெனத் தெரிகிறது. பிரிட்டனில் ராஜாங்கத்துக்கு விரோதமானவர்களை இக் கொடுமையான தண்டனைக்குள்ளாக்கும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வந்தது. கி. பி. 370ம்வருடத்தில் நிக்கோமீடியாவுக்கருகில் சுமார் 80 பிஷப்புகள் ராஜத்துரோகம் செய்ததற்காக நீரில் ஆழ்த்தப்பட்டனர்., 17வது நூற்றாண்டில் பிரான்ஸ் தேசத்தில் இத்தகைய தண்டனை பெரும்பாலும் கையாளப்பட்டு வந்தது.

கண்களை அவித்து விடும் கல்நெஞ்சர்கள்.

பண்டைக் காலத்தில் மற்றொரு கோரமான தண்டனையும் கையாளப்பட்டது. அதாவது கண்கள் இரண்டையும் சுண்ணாம்பு வைத்து நீற்றியோ அல்லது அக்கினி திராவகத்தை ஊற்றியோ அவித்து விடுவது. இத் தண்டனை முன்னிரண்டை விட மிக மிகக் கொடுமையானது. கண்களை அவிக்கும் போது அனுபவிக்கும் வேதனையும் கண்கள் கெட்ட பின்னர் அவர்கள் பிறர் உதவியின்றி மல ஜலம் கழிக்கவும் வகைதெரியாமல் கேவலம் நடைபிணங்களாகி விடும் பரிதாபகரமான நிலைமையும் கன்னெஞ்சத்தையும் உருகச் செய்யுமென்பதில் ஐயமில்லை. இத்தகைய கொடுந் தண்டனையை நாம் மனதில் நினைக்கவும் நமது நெஞ்சம் கலங்குகிறது. பேனா நடுங்குகிறது. முக்கியமாக் இத்தண்டனை அக்காலத்தில் பிறன் மனைவியைச் சேர்ந்தவர்களுக்கும், பொய்ச் சாக்ஷி கூறியவர்களுக்கும் திருட்டுக் குற்றம் செய்தவர்களுக்கும் விதிக்கப்பட்டது; பிற்காலத்தில் ஐரோப்பாவில் இத்தண்டனையின் கொடுமை சிறிதளவு குறைக்கப்பட்டது. அதாவது கண்களின் ஒளியைப் பாதி கெடுத்து விடுவது.

கி. பி. 1014-வது ஆண்டில் பல்கேரியா நாட்டின் மீது படையெடுத்துச் சென்ற உரோமச் சக்ரவர்த்தி பேஸில் என்பவர் பல்கேரியர்களைப் போரில் முறியடித்து அவர்கள் அனைவரையும் கைதிகளாக்கினார். அவ்வாறு கைதியானவர்கள் ஒருவர் இருவரல்ல, 1500 பேர்களாவர். இவர்கள் அனைவருடைய கண்களையும் அவித்து விடும்படி உத்தரவளித்தார். ஆஹா! என்னே மனிதன் மனிதனுக்குச் செய்யும் கொடுமை.

உயிருடன் கொளுத்தும் கோரம்.

இதற்கு முன் கூறிய மூன்று தண்டனைகளை விட மிக மிகக் கோரமான தண்டனை பெண்களை உயிருடன் நெருப்பிலிட்டுக் கொளுத்துவது. அந்நாட்களில் சூனியக் காரிகள் என்ற பெண் வகுப்பினர் இருந்தனர். அவர்கள் பேய் பிசாசுகளுடன் உறவு கொண்டாடுவதாகவும், மனிதவர்க்கத்துக்குத் தீங்கு செய்வதே அவர்கள் தொழில் எனவும் அக்காலத்தில் ஜனங்கள் நம்பினர். உதாரணமாக ஒரு கிராமத்தில் மழை பெய்யாமல் பஞ்சம் ஏற்படும் போல் இருந்தால் சூனியக்காரிகள் பாடு திண்டாட்டம்தான். அவர்களை ஜனங்கள் வேட்டையாட ஆரம்பித்து விடுவர். எங்கிருந்தாவது அவளைப் பிடித்துக் கொண்டு வந்து கம்பங்களில் கட்டி, சுற்றிலும் வைக்கோல முதலியவற்றைப் பரப்பி நெருப்பு வைத்து விடுவர். இத்தகைய

கொடுமைகள் ரோமா புரியில் அடிக்கடி அக்காலத்தில் நடைபெற்றதாகச் சரித்திரங்கள் கூறுகின்றன. 1484ம் வருஷத்தில் பரிசுத்த பாப்பரசர் எட்டாவது இன்னொஸென்ட், இத்தலியில் சூன்யக்காரிகள் அனைவரையும் பிடித்து உயிருடன் தகனம் செய்யும்படி உத்தரவு பிறப்பித்தாராம்! அவ்வளவுதான்! சூனியக்காரிகள் எனச் சந்தேகிக்கப்பட்ட பெண்களையும், அக்காலத்தில் சோதனையில் தவறிய பெண்களையும் கம்பங்களில் உயிருடன் கொளுத்தும் கோரமான சம்பவத்தைக் காண அக்காலத்திய ஜனங்கள் சந்தோஷத்தினால் ஆரவாரித்தார்கள்.

சிரச்சேதத் தண்டனை.

எண்சாண் உடம்பிற்கும் பிரதானமாகிய சிரசைத் துண்டித்து விடுவது இங்கிலாந்தில் பல நூற்றாண்டுகளாகக் கையாளப்பட்டு வந்த கோரமான தண்டனையாகும். இந்தியாவில் இத்தண்டனை அக்காலத்தில் சர்வ சாதாரணமாக நடைபெற்று வந்தது. இத்தண்டனை ஆதியில் ரோமர்களிடமிருந்து இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தது. 1076ம் ஆண்டில் ஹண்டிங்டன் பிரபுவுக்கு இச்சிரச்சேதத் தண்டனை விதிக்கப்பட்டது. பிற்காலத்தில் அதாவது 15ம் நூற்றாண்டில் சிரச்சேதத் தண்டனைகள் இங்கிலாந்தை ஆண்ட எட்டாவது ஹென்றி மேரி ராணி முதலியோர் காலத்தில் வெகு தீவிரமாக விதிக்கப்பட்டது. உயர்ந்த குடும்பங்களில் பிறந்த பெண்களும் இத்தண்டனைகளை அனுபவித்தனர். 1541ம் வருஷத்தில் கிளாரன்ஸ் பிரபுவின் குமாரியாகிய சாலிஸ்பரி சீமாட்டி சிரச்சேதம் செய்யப்பட்டாள். அப்பெண்மணியைக் கொலையாளிகள் கொலைக்களத்துக்குக் கொண்டு வந்து நிறுத்தினர். இக்கோர சம்பவத்தைக் காண ஏராளமான ஜனங்கள் குழுமியிருந்தனர். பெண்ணின் அருகில் ஒரு பெரிய மரத்துண்டு கிடந்தது. அதில் அவளது தலையை வைக்கும்படி கொலையாளிகள் கூறினர். ஆனால் அப்பெண்மணி "நான் கேவலம் கொலைக்குற்றஞ் செய்தவளைப் போல் தலை குனிய மாட்டேன்" என்று வீரமொழி பகர்ந்தனள்.

அரசனின் கட்டளைப்படி நடக்க வேண்டிய கொலையாளிகள் அப்பெண்மணியை நிர்ப்பந்தப்படுத்தினர். அவள் அவர்களுடைய கையினின்று நழுவி ஓடினாள். கொலையாளிகளும் பின் தொடர்ந்தனர். எல்லோரும் கொலைக்களத்தைச் சுற்றி வந்தனர். பெண்மணி தப்பி ஓடிவிடுவாள் போல் தோன்றியது. உடனே கொலையாளிகள் அனைவரும் அப்பெண்மணியின் மண்டையைத் தங்களுடைய கூரிய கோடரிகளால் பிளந்து விட்டனர். குருதி குழறிப் பாய்ந்தது. கழுத்தைச் சின்னாபின்னப் படுத்தினர். அப்பெண்மணி அடியற்ற மரம் போல் வீழ்ந்தாள். தலையற்ற முண்டம் சிறிது நேரம் துள்ளிக் குதித்தது. என்ன கோரம்! என்ன கோரம்!!

வெந்நீரில் வேகவைக்குந் தண்டனை

உயிருடன் நெருப்பிலிட்டுக்கொளுத்துவதைப்போல் கோரமான மற்றொரு தண்டனையும் 16ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் கையாளப் பட்டதாக நம் சரித்திரங்களிலிருந்து அறியக் கிடக்கின்றது. அதாவது கொதிக்கும்

தீயில் குற்றம் செய்தவனை வேக வைப்பது. இத்தண்டனை உணவில் விஷம் வைப்பவர்களுக்கு விதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. 1531ம் வருஷத்தில் ராச்சஸ்டர் பிஷப்பின் சமையல்காரன் தன் எஜமானனுக்கு ஆகாரத்தில் விஷத்தைக் கலந்து அவரைக் கொலை செய்ய எத்தனித்தானும். அவனது சூழ்ச்சி எவ்வாறோ வெளிப்பட்டு விட்டது. அன்னவன் கொதிக்கும் நீரில் வெந்து மாண்டான். இத்தண்டனையின் கொடுமையை நாம் அதிகமாக விவரிக்க வேண்டியதில்லை. இதைச் சித்திரவதை என்றே கூறல் வேண்டும். இது போலவே 1542ம் வருஷத்தில் மார்க்காட்டேவி என்ற பெண்ணும் உணவில் விஷங் கலக்க முயற்சித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு வெந்நீரில் வெந்து மரணமனுபவித்தாள்?

கண்டங் கண்டமாக வெட்டுவது

மற்றுமோர் பயங்கரமான தண்டனை 12ம் நூற்றூண்டு முதல் 15ம் நூற்றூண்டு வரையில் ஐரோப்பாவில் கையாளப்பட்டு வந்ததாக அறியப்படுகிறது. கொள்ளைக்காரர்களுக்கும், ராஜத்துவேஷிகளுக்கும் அக்காலத்தில் விதிக்கப்பட்ட தண்டனையைக் கேள்விப்பட்ட மாத்திரத்திலேயே நமது நெஞ்சம் நடுக்குறும். அதாவது குற்றவாளியை முதன் முதலாக ஒரு சக்கரத்தில் வைத்து அதிவேகமாகச் சுழற்றுவது. சுழலில் ஸ்மாரணை யற்ற பின் அவனைத் தூக்கி ஒரு சிலுவையில் கட்டுவது. கட்டிய பின் ஒரு பெரிய இரும்புத் தடி கொண்டு ஒவ்வொரு அங்கத்தையும் (நிர்வாணமாக) அடித்து நொறுக்குவது! இது எத்தனைக் கோரமான தண்டனை?

பண்டைக் காலத்தில் குற்றவாளிகளை அங்கவீனர்களாக்குவதும் ஒரு தண்டனையாகும். 1572ம் வருஷத்தில் இங்கிலாந்தில் இத்தண்டனை மிகுதியும் கையாளப்பட்டது. அங்கவீன மின்றித் தெருவில் பிச்சையெடுத்துண்டு கொழுக்கும் மனிதர்களைச் சவுக்கால் அடித்து அவர்கள் காதுகளைக் கொள்ளி கொண்டு சுட்டுவிடும் தண்டனை சர்வ சாதாரணமாக நடைபெற்று வந்தது. பிறன் மனைவியை ஒருவன் இச்சித்து அவளுடன் இன்ப மனுபவித்து விடுவானாயின் அவனது காதுகளையும், மூக்கையும் அறுத்து விடுவது, கி. பி. 9ம் நூற்றூண்டில் கையாளப்பட்ட சாதாரணத் தண்டனையாகும். கள்ளக் கையெழுத்து மிடுவோரும், கள்ளப் பத்திரங்கள் சிருஷ்டிப்போரும் எலிஸபெத் மகாராணியார் காலத்தில் காதுகளையும், மூக்கையும் இழந்ததுமின்றி, அவர்கள் சொத்துகளை இழந்து ஆயுள் வரை சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டியிருந்தது.

சிலுவையில் அறைதல்

மானிட ஜென்மத்தைக் கடைத்தேற வைக்கும் பொருட்டு திருவவதாரம் செய்தருளிய இயேசு பெருமானை அக்காலத்திய காட்டுமிராண்டிகள் எவ்விதமான சித்திரவதை செய்தனர் என்பதை நாம் கவனிக்கும் போது நமது தேகம் முழுமையும் நடுங்குகிறது! இயேசு பெருமான் சிலுவையில் மரித்தார். சிலுவையில் அறைவது என்பதென்ன? ஒரு

நெடிய கட்டையை நாட்டுவது, குறுக்கே ஒரு கட்டையைச் சேர்ப்பது; அதில் மனிதனை வைத்து, மார்பு, இரண்டு பாதங்கள், கைகள் முதலிய இடங்களில் ஆணிவைத்து அடித்து விடுவது. சிலுவையை மனிதனுடன் உயரமான இடத்தில் நாட்டி விடுவது. இத்தகைய கொடுமையான தண்டனை இயேசு பெருமானுக்கு விதிக்கப் பட்டது. ஆனால் பெருமான் எல்லா வற்றையும் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டார்.

மேற் கூறியவற்றிலிருந்து மனித சமூகத்தின் முன்னேற்றத்தை ஒருவாறு உணர்ந்துகொள்ளலாம். ஆயினும் ஒரு கேள்வி எழலாம். கடந்த மகாயுத்தத்தில் எத்தனைக் கொடுமைகள் மனிதவர்க்கத்துக்கு இழைக்கப் பட்டன? இவற்றை நோக்குமிடத்து இவ்விருபதாம் நூற்றாண்டில் வாழும் நாம், கேவலம் நாகரிகமற்ற காட்டு மிராண்டிகளைப் போல்தானே நடந்து கொண்டோம் என்று சிலர் கூறலாம். ஆனால் அது யுத்த காலம். யுத்த வெறி மனித வர்க்கத்தைப் பற்றிக் கொள்ளும் காலத்தில் அவனது ராக்ஷஸ குணங்கள் தாண்டவமாட ஆரம்பித்து விடுகின்றன. எனவே நாம் யுத்த காலத்தை ஓர் உதாரணமாகக் கொள்ளுதல் நியாயமாகாது. சாதாரண காலத்தைக் கொண்டு நாம் நோக்குமிடத்து தற்கால மனித வர்க்கத்தின் மனப் போக்கு முன்னேறியுள்ளதென்றே கூற வேண்டும். இனிமேல் குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனையைக் கூட நிறுத்த வேணுமென்று சில சட்டசபை அங்கத்தினர்கள் முயற்சித்து வருகிறார்கள்.

விருந்தும் வாழ்க்கையும்

மகனே! ஒரு விருந்தில் நீ எப்படி நடந்து கொள்வாயோ அப்படியே வாழ்க்கையிலும் நடந்து கொள்ள வேண்டும். உன்னிடம் ஏதேனும் தின்பண்டங்கள் ஒரு தட்டில் போட்டுக் கொண்டு வரப்படுகின்றனவா! உன் கையை அதில் போட்டு, உன் பங்கை நிதானமாக எடுத்துக் கொள். அப்படிக்கில்லாமல், மேற்படி தின்பண்டத் தட்டு உன்னிடம் கொண்டு வரப்படாமல் வேறொருவரிடம் கொண்டு வரப்படுகிறதா? அப்படியானால் அதனைத் தடை செய்யாதே. அல்லது, அந்தத் தட்டு உன்னிடம் வரவே யில்லையா? அப்படி வரவில்லையென்று முணகாதே. அதற்காக ஆசைப் படுவதாகக் காட்டாதே. உனது மக்கள், மனைவி, சுற்றத்தார் முதலிய அனைவருடைய விஷயத்திலும் நீ இதே முறையை அநுஷ்டிப்பாயானால், வாழ்க்கை விருந்தை நீ நன்றாகச் சுவைக்கக் கூடும்.

—எபிக்டேடஸ்:

—எப். ஸ்டெர்ன்பெர்க்

தற்கால யுத்த முறைகள்

இப்பொழுது நடைபெறுகிற யுத்தம் எப்பொழுது ஆரம்பித்ததோ, அப்பொழுதிருந்தே, இந்த உலக யுத்தமாகி விடுமென்றும், ஹிட்லர், பிரிட்டனைத் தாக்குகிற தன்னுடைய ஏற்பாட்டில் எப்பொழுதுமே ஜப்பானை அணைத்துக் கொண்டு வருவாரென்றும், ஐரோப்பாவில் யுத்த சம்பந்தமாக நடைபெறுகிற ஒவ்வொரு சம்பவமும் கீழ் நாட்டிலும் எதிரொலி கொடுக்குமென்றும் அறிஞர்கள் கூறி வந்தார்கள். இவையெல்லாம் ஏறக்குறைய அப்படியே நடைபெற்று வருகின்றன. ஆனால், பிரிட்டனும் ஜெர்மனியும் இருபதாவது நூற்றாண்டு முறையில் யுத்தத்தை நடத்தி வருகின்றன. ஜப்பானோ, பத்தொன்பதாவது நூற்றாண்டு முறைகளையே கையாண்டு வருகிறது. இதைச் சிறிது விளக்கிக் கூறுவோம்.

முதலாவது, இப்பொழுது ஐரோப்பாவில் நடைபெறுகிற யுத்தமானது பொருளாதார சம்பந்தமான யுத்தம் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இதனால்தான், யுத்தத்திலே என்னென்ன நாடுகள் சம்பந்தப்பட்டிருக்கின்றனவோ, அந்த நாடுகள் யாவும், தங்களுடைய பொருளாதார சக்திகள் அனைத்தையுமே திரட்டி உபயோகிக்க வேண்டியிருக்கிறது. பிரிட்டனிலும் ஜெர்மனியிலும் யுத்தச் செலவுகள் ஏராளமாக ஏறி நிற்பதொன்றைக் கொண்டே இதனை நாம் தெரிந்து கொள்ளலாம். யுத்த ஆரம்ப காலத்தில், ஜெர்மனியின் மாதாந்த யுத்தச் செலவு சுமார் 3,000,000,000 ரூபாயாகவும், பிரிட்டனுடைய மாதாந்தச் செலவு சுமார் 1,500,000,000 ரூபாயாகவும் இருந்தது. இப்பொழுது, அதாவது யுத்தம் ஆரம்பித்த ஏறக்குறைய இரண்டாவது வருஷ முடிவில், ஜெர்மனியின் மாதாந்த யுத்தச் செலவு ஏறக்குறைய 6,000,000,000 ரூபாயாகவும், பிரிட்டனுடைய மாதாந்த யுத்தச் செலவு ஏறக்குறைய 4,250,000,000 ரூபாயாகவும் இருக்கிறது. எனவே, இந்த யுத்தம் பொருளாதார வகையில் மிகப் பெரிய யுத்தம் என்பதை யாரும் மறுக்க முடியாது. தவிர, ஜெர்மனி, தன்னாதிக்கத்திற்குட்பட்ட நாடுகளில் பொருளாதார சம்பந்தமாக என்னென்ன விதமான முறைகளைக் கையாண்டு வருகிறதென்பதை இங்குத் தெரிந்து கொள்வது நல்லது. யுத்தம் தொடங்குவதற்குப் பல வருஷங்களுக்கு முன்னரேயே, ஜெர்மனியானது, ஜெர்மனியின் தொழிலுற்பத்திச் சக்தியையெல்லாம் ஒன்றுபடுத்தி ஒரு திட்டத்திற்குட்படுத்த, தனியாக ஓர் இலாகாவை நியமனம் செய்தது. ஜெர்மனி, ஆஸ்திரியா, ஜெக்கோஸ்லோவேகியா, போலந்தில் ஒரு பாகம் ஆகிய இவையனைத்தும் சேர்ந்து 'விசால ஜெர்மனி' யென்று இப்பொழுது அழைக்கப்படுகிறது. இதில் 100,000 000 ஜனங்கள் இருக்கிறார்கள். பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாண்ட்ஸ், ஸ்காண்டிநேவியா, பல்கேரியா, ருமேனியா முதலிய ஜெர்

மனியின் ஆதிக்கத்துக் குட்பட்ட பிரதேசங்களின் ஜனத்தொகை சுமார் 100,000,000. ஐரோப்பா முழுவதையும் ஆக்ரமித்துக் கொண்டு விட வேண்டுமென்கிற ஆசை இப்பொழுது ஹிட்லருக்கு இருக்கிறதைப்போலவே நெப்போலியனுக்கு இருந்தது. அவன், தன்னாதிக்கத்திற் குட்பட்ட நாடுகளிலுள்ள ஜனங்களை, தன்னுடைய ராணுவத்தில் போர்வீரர்களாகக் கட்டாயப்படுத்திச் சேர்த்துக் கொண்டான். ஆனால் இப்பொழுது ஹிட்லர் அந்த மாதிரியான முறைகளைபெல்லாம் கையாளவில்லை. ஜெர்மன் ராணுவத்தில், பெல்ஜியப் போர் வீரனோ, ஜெக்க நாட்டானோ, அல்லது பிரெஞ்சுக்காரனோ இல்லை. ஆனால், பெல்ஜியம், நார்வே, பிரான்ஸ், ஜெக்கோஸ்லோவேகியா முதலிய நாடுகளின் உற்பத்திச் சாதனங்கள் யாவும் ஜெர்மனியின் ஆதிக்கத்துக் குட்பட்டிருக்கின்றன. இந்த நாட்டு ஜனங்களுக்கு, ஜெர்மனியின் விஷயத்தில் அதிருப்தி இருந்து கொண்டிருக்கலாம்; அமெரிக்காவின் உதவி பெற்று, பிரிட்டன் வெற்றியடையாதா என்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் இவர்கள், இப்பொழுதைக்கு, ஜெர்மனிக்குத் தேவையான ராணுவப் பொருள்களை உற்பத்தி செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். யுத்தத்தில் சம்பந்தப்பட்ட இரு கட்சியினருள் ஒரு கட்சியினர், ஆள் பலர் திரட்டுகின்றனர். இன்னொரு கட்சியினர் யுத்தப் பொருள்களைத் திரட்டுகின்றனர். இதுதான் இருபதாவது நூற்றாண்டின் யுத்த முறை. ஆனால் ஜப்பானுடைய முறை மட்டும் வேறுவிதமாக இருக்கிறது.

சீனாவுடன் தீவிரமான யுத்தத்தை நடத்திவரும் ஜப்பானானது, தனது பல வகையான பலத்தையும் திரட்டிக் கொண்டுதான் வருகிறது. ஜப்பானிய அரசாங்கத்தின் பிரஸ்தாப வருஷத்து செலவுத் தொகையானது சுமார் 9,065,628,000 ரூபாய். இந்தச் செலவுத் தொகை, ஜப்பானின் அரசியல் சரித்திரத்தில் இதற்குமுன் எப்பொழுதும் இருந்ததில்லையாம். ஜப்பானுடைய தேசிய வருமானம் அதாவது ஜனங்களுடைய மொத்த வருமானம் சுமார் 18,000,000,000 ரூபாய். எனவே, ஜனங்களின் மொத்த வருமானத்தில் பாதிப்பாகம் அரசாங்கச் செலவாகிவிடுகிறது. இந்தத் தொகையில் ஏறக்குறைய பாதித் தொகை ராணுவ செலவாகவே உபயோகிக்கப்படுகிறது. சீனாவுடன் யுத்தம் தொடுத்தது முதற்கொண்டு, ஜப்பானானது வருஷத்தில் சுமார், 3 000,000,000 ரூபாய் யுத்தச் செலவாகச் செலவழித்துக்கொண்டிருக்கிறது. ஜப்பானுடைய செலவுச் சக்தி எவ்வளவுண்டோ அந்த அளவின் உச்ச ஸ்தானத்திற்கு இப்பொழுது ஜப்பான் வந்திருக்கிறது. இதே உச்ச ஸ்தானத்தில் அது நீடித்த காலம் இருக்க முடியாது. ஆனால், மற்ற நாடுகள், ராணுவத்திற்கென்று செலவழிக்கிற தொகையைக் காட்டிலும் ஜப்பானுடைய ராணுவச் செலவு அதிகமென்று சொல்ல முடியாது. ஜெர்மனியின் ஒன்றரை மாதத்து ராணுவச்செலவு எவ்வளவோ, கிரேட் பிரிட்டனின் இரண்டு மாத காலத்து ராணுவச் செலவு எவ்வளவோ அதே செலவுதான் ஜப்பானுடைய ஒரு வருஷத்துச் செலவாகிறது. ஜப்பா

னுடைய ராணுவச் செலவு இவ்வளவு சுருக்கமாக இருப்பதற்குக் காரணமென்ன?

ஜப்பான், மற்ற ஐரோப்பிய வல்லரசுகளைப்போல் ஒரு தொழில் பெருக்கமுள்ள நாடல்ல. மற்றும் ஜப்பானின் தேசிய வருமானம், மற்ற வல்லரசுகளைக் காட்டிலும் மிகக் குறைவானது. இதனால், ஜப்பானின் உற்பத்திச் சக்தியானது குறைவாகவே இருக்கிறது. தன்னுடைய பொருளுற்பத்திச் சக்தியை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன், ஜப்பான், தெற்கு நோக்கித் தன் ஆதிபத்தியத்தை விஸ்தரித்துக்கொண்டு போகப் பார்க்கிறது. சீனாவில், இப்பொழுது ஜப்பானிய ஆதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களில் ஏறக்குறைய 200,000,000 பேர் வசிக்கிறார்கள். அதாவது இப்பொழுது ஹிட்லருடைய ஆக்ரமிப்புக்குட்பட்டிருக்கிற பிரதேசங்களில் எவ்வளவு ஜனங்கள் இருக்கிறார்களோ அவ்வளவு ஜனங்கள், ஜப்பானிய ஆக்ரமிப்புக்குட்பட்ட சீனாவில் இருக்கிறார்கள். தன் ஆதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களில், எந்த விதமாகப் பொருளாதார வசதிகளைச் சுரண்டலாமென்று ஏற்கனவே ஹிட்லர் திட்டம் போட்டு வைத்திருந்தபடியால், இப்பொழுது அவன் தன்னால் அடக்கப்பட்ட நாடுகளிலிருந்து 1,200,000,000 ரூபாய் பெறுமான பொருள்களை மாதந்தோறும் பெறுகிறான். சீனயுத்தத்தில் ஜப்பானுக்கு வருஷந்தோறும் எவ்வளவு செலவாகிறதோ அதைவிட ஐந்து மடங்கு அதிகமாக ஒரு மாதத்திற்குள் ஜெர்மனி, தனது ஆதிக்க நாடுகளிலிருந்து பெறுகிறது. ஆனால் இவ்வளவு துரிதமாகவும் அதிகமாகவும், சீனாவில் தனது ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளிலிருந்து பெற முடியவில்லை. இதற்குக் காரணம், ஜப்பானிலேயே தொழிற் பெருக்கம் அதிகமில்லை. தவிர சீனாவில் அது எதிர்பார்த்தபடி அரசியல் வெற்றிகளையும் நிருவாக வெற்றிகளையும் அடைய முடியவில்லை. சுமார் நூறு வருஷங்களுக்கு முன்னர், ஐரோப்பிய வல்லரசுகள் எந்தவிதமான யுத்த முறைகளை அநுஷ்டித்தனவோ அதே மாதிரியான முறைகளை இப்பொழுது சீனா விஷயத்தில் ஜப்பான் அநுஷ்டித்து வருகிறது. இதனால், சீனாவில், தான், எந்தெந்தப் பிரதேசங்களைக் கைப்பற்றிக்கொண்டதோ அந்தப் பிரதேசங்களினால் தனக்கு எவ்வித சாதகமுமில்லையென்பதை இப்பொழுது ஜப்பான் உணர்ந்து வருகிறது. அதுமட்டுமல்ல; ஜப்பானுடைய பொருளுற்பத்திச் சக்தியும் இதனால் பாதிக்கப்படுகிறது. சீனாவில், தான் ஆக்ரமித்துக்கொண்டிருக்கிற பிரதேசங்களில் ஏராளமான ராணுவத்தை ஜப்பான் வைத்துக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. இந்த ராணுவத்திற்கென்று, ஜப்பான் செய்கிற செலவு மிகவும் அபாரம்.

இனி ஜப்பானுடைய ராணுவச் செலவையும், அமெரிக்காவின் ராணுவச் செலவையும் ஒப்பிட்டுப் பார்ப்போம். ஜப்பானில் சராசரி ஒரு வருஷத்திற்கு 9,000,000,000 ரூபாய் ராணுவச் செலவாகச் செலவழிக்கப்படுகிறது. 1939ம் வருஷம் செப்டம்பர் மாதம் ஐரோப்பிய மகா யுத்தம் தொடங்கப்படுவதற்கு முன்னர், அமெரிக்காவின் ராணுவச் செலவு

ஒரு வருஷத்திற்குச் சுமார் 3,000,000,000 ரூபாயாகிக் கொண்டிருந்தது. ஆனால் பிரான்ஸ் வீழ்ச்சியுற்று, டங்கர்க்கிலிருந்து பிரிட்டிஷார் ஓடி வந்த பிறகு, அமெரிக்காவின் ராணுவச் செலவு ஒன்றுக்கு ஆறுமடங்கு அதிகமாகி விட்டது. அதாவது 1941ம் வருஷம் ஏப்ரல் மாதத்தின் போது, அமெரிக்காவின் ஒரு வருஷ ராணுவச் செலவு ஏறக்குறைய 1,800,000,000 ரூபாயாகி யிருக்கிறது. இது ஜப்பானுடைய ஒரு வருஷ ராணுவச் செலவைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிகமாயிருக்கிறது அடுத்த வருஷத்திற்கு அமெரிக்காவின் ராணுவச் செலவு உத்தேசமாக, 36,000,000,000 ரூபாயாகுமென்று திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஒரு தேசத்தில் ராணுவச் செலவு அதிகமாகிக் கொண்டு வருகிறதென்று சொன்னால் அந்தத் தேசத்துத் தொழிலாளர்கள், தங்களுடைய வேலை நேரத்தில் ஒரு பகுதியை, தேசப் பாதுகாப்புக் கென்று, அதாவது ராணுவ தளவாடங்களின் உற்பத்திக் கென்று செல வழிக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது அமெரிக்காவில், தொழிலாளர்கள், தங்களுடைய எட்டு மணி வேலை நேரத்தில ஒருமணி நேர விகிதம் யுத்த தளவாட உற்பத்திக் கென்று செலவழிக்கிறார்கள். இதன் பிரகாரமே, இவர்கள் வேலை செய்து கொண்டு போனார்களானால், ஜப்பான், ராணுவச் செலவாக எவ்வளவு செலவழிக்கிறதோ அதைவிட நான்கு மடங்கு அதிகமாக அமெரிக்காவின் யுத்த தளவாட உற்பத்தி இருந்து கொண்டிருக்கும். இதற்குக் காரணம், அமெரிக்காவின் யந்திர உற்பத்திசக்தி அதிகமாயிருப்பதுதான். அப்படியானால் ஜப்பானுடைய நிலைமை யென்ன? ஹிட்லர், இந்த யுத்தத்தில் தோல்வி யுற்றால், பிரிட்டனும் அமெரிக்காவும் பசிபிக் மகா சமுத்திரத்தில் ஒன்று சேருமானால் அப்பொழுது ஜப்பானுடைய நிலைமை யென்னாகும்?

தற்கால யுத்தத்தில் வெற்றி தோல்விகளானது, ஆகாய விமானங்களினாலும் டாங்கிகளினாலுமே நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் இப்படிப் பொதுவாகச் சொல்லி விடுவதற்கில்லை. ஒரு தேசத்திற்கு விமானங்களும் டாங்கிகளும் அதிகமாயிருந்து விட்டதனாலேயே அது ஜெயித்து விடுமென்பது அர்த்தமில்லை. உதாரணமாக ஆப்ரிக்காவில் பிரிட்டனுக்கு இருக்கிற விமானங்கள், டாங்கிகள் முதலியவைகளைக் காட்டிலும் இத்தலிக்கு அதிகமான விமானங்களும் டாங்கிகளும் இருக்கின்றன. ஆயினும் இத்தலியினால் அதிகமான வெற்றிகளைக் காண முடியவில்லை. இதற்குக் காரணம், இத்தலியின் விமானங்களும் டாங்கிகளும், பிரிட்டனுடைய விமானங்களையும் டாங்கிகளையும் காட்டிலும் குறைவான சக்தியுடையவை. இதே மாதிரிதான் சீன யுத்தத்தில் ஜப்பானுடைய விமானங்களும் டாங்கிகளும் குறைவான சக்தியுடையனவாயிருக்கின்றன. இதனாலேயே இந்த யுத்தம் இத்தனை வருஷ காலம் நீடித்து நடைபெறுகிறது. இப்படியே இது நீடித்துக்கொண்டு போகுமென்றும் தோன்றுகிறது. ஏனென்றால் சமீபத்தில் சீனாவுக்கு அமெரிக்காவானது சுமார் 300,000,000 ரூபாய் கடன் கொடுத்திருக்கிறது. இந்தத் தொகையில்

பத்தில் ஒரு பங்கை, சிறுவானது, யுத்த தளவாட உற்பத்திக்கென்று செலவழித்துக்கொண்டு போனால்கூட, அது, நீடித்த காலம் ஜப்பானை எதிர்த்துக்கொண்டு போகுஞ் சக்தியைப் பெறும்.

இத்தகைய காரணங்களினால் புலப்படுவதென்ன வென்றால் ஜப்பான், இப்பொழுது சீன விஷயமாக நடத்திக் கொண்டு வரும் போராட்டமானது, பத்தொன்பதாவது நூற்றாண்டுப் போராட்டம். ஹிட்லரின் கையோங்கி யிருக்கிற வரையில்தான் ஜப்பானும் ஆர்ப்பாட்டஞ் செய்துகொண்டிருக்கலாம். எனவே, அமெரிக்காவுக்கு பஸிபிக் மகா சமுத்திரத்திலிருந்து எவ்வித ஆபத்தும் ஏற்படுவதா யிருந்தால் அஃது அத்லாந்திக் மகா சமுத்திரத்தின் மூலமாக அதாவது ஹிட்லரின் மூலமாகத்தான் ஏற்படக் கூடும்.

உயர்ந்த மலைகள்

பெயர்	நாடு	அடி உயரம்
எவரெஸ்ட்	ஹிமாலயம்	29,002
காட்வின் ஆஸ்டென்	,,	28,250
கஞ்சின் ஜிங்கா	,,	28,146
மக்காலு	,,	27,790
தெங்கிரிகான்	துருக்கிஸ்தானம்	24,000
ஜூமல் ஹாரி	ஹிமாலயம்	23,944
அகோன் காகுவா	அமெரிக்கா	23,390
இல்லாம்பு	,,	21,490

ஸ்டாலின்—ருஷ்யாவின் சர்வாதிகாரி

ஆசியா கண்டத்தைச் சேர்ந்த ருஷ்யாவில் ஜார்ஜியா என்றொரு மாகாணம் இருக்கிறது. இங்கு விஸ்ஸேரியான் ஜெளகாசிவ்ஸி என்றொரு குடியானவன் இருந்தான். இவன் ஓர் ஏழை. சக்கிலித் தொழில் செய்து கொண்டு வந்தான். இவனுடைய மகன், இப்பொழுது ருஷ்யாவின் சர்வாதிகாரியாக இருக்கும் ஸ்டாலின். இவன் 1879ம் வருஷம் பிறந்தான். ஸ்டாலினுக்குச் சிறிய வயதில் ஸோஸ்ஸோ என்று பெயர். மிகவும் துஷ்டத்தனம் செய்து வருவான். கிராமத்திலுள்ள வைக்கோற்போர்களை யெல்லாம் கொளுத்தி விடுவான். இன்னும் கிராம வாசிகளுக்குப் பல விதமான உபத்திரவங்களைச் செய்து வந்தான். பெற்றோர்கள் இவனைப் பலவிதமாகக் கண்டித்துப்பார்த்தார்கள். பயனில்லை. கடைசியில் இவனைப் பாதிரித் தொழிலுக்குப் படிக்க வைப்பதென்று தீர்மானித்தார்கள். அப்படியே டைப்ளிஸ் என்ற ஊரிலுள்ள ஒரு பாதிரி மடத்தில் சுமார் நான்கு வருஷகாலம் பாலிய ஸ்டாலின் படித்தான். நன்றாகவும் படித்தான். ஒழுங்காக வாழ்க்கையை நடத்தத் தொடங்கினான். அப்பொழுது இவனுக்கு வயது பதினெட்டு. இந்தக் காலத்தில், இவன் கையில் ஒரு துண்டுப் பிரசுரம் கிடைத்தது. அதில் ஜார் ஆட்சி முறையைத் தாக்கி எழுதப் பட்டிருந்தது. இதைப் பார்த்ததும் ஸ்டாலினுக்கு ஒரு புத்துணர்ச்சி உண்டாயிற்று. இந்தக் காலத்திலிருந்து இவன் வாழ்க்கை ஒரு புரட்சிகரமான வாழ்க்கையாகி விட்டது. பாதிரி மடத்திலிருந்த போது, புரட்சி சம்பந்தமான பல நூல்களைப் படித்து வந்தான். கார்ல் மார்க்ஸ், லெனின் முதலியோர் எழுதிய பல நூல்களையும் படித்தான். இவனை யறியாமலே இவனுக்கு லெனினிடத்தில் ஒரு பக்தி ஏற்பட்டது. அவனைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலும் உண்டாயிற்று. இவனைப் பற்றிச் சந்தேகித்த பாதிரி மடத்து அதிகாரிகள் இவனை வெளியேற்றி விட்டார்கள்.

டைப்ளிஸ் பஜார் ஒன்றுண்டு. அந்த பஜாரில் வேலை செய்கிறவர்கள் பல வித இம்சைகளுக்குட் படுத்தப் பட்டார்கள். ஸ்டாலின், இவர்களுடைய துன்பத்திற்குப் பரிகாரங் காணும் பொருட்டு, மேற்படி பஜாரில் ஒரு தொழிலாளியாக அமர்ந்தான். அங்குத் தொழிலாளர்கள் படும் அவஸ்தைகளை அநுபவித்தான். இந்த அநுபவத்தை வைத்துக் கொண்டு, தொழிலாளர்களிடையே ஒரு வேலை நிறுத்தத்தை ஆரம்பித்து வெற்றிகரமாக முடித்தான்.

இதற்குப் பின்னர், லெனினுக்கும் இவனுக்கும் கடிதப் போக்கு வரத்து மூலமாகத் தொடர்பு ஏற்பட்டது. போல்ஷ்விக் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு வேலை செய்தான். லெனின் ரகசியமாக அனுப்பிய துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதில் அதிக உற்சாகங் காட்டினான். இது சம்பந்தமாகப் பல முறை சிறை சென்றான்; பல முறை சிறையிலிருந்து தப்பினான். ஜார் அரசாங்கத்தின்

போலீஸ் நிபுணர்களால் இவன் வேட்டையாடப் படாத வருஷங்கள் இடையா தென்று சுருக்கமாகச் சொல்லலாம்.

1917ம் வருஷம் அக்டோபர் மாதம் ருஷ்யாவில் பலத்தபுரட்சி நடைபெற்றதல்லவா! அப்பொழுது லெனின், ஸ்விட்ஜர்லாந்திலிருந்து ஜெர்மனியின் வழியாக, ருஷ்யாவுக்கு வந்து புரட்சியை நடத்தினான். அப்பொழுது ஸ்டாலின் அவனுக்கு உறுதுணையாயிருந்து அநேக காரியங்களைச் செய்தான். லெனினுக்கு இவனிடத்தில் ஒரு விசேஷ பிரேமை ஏற்பட்டுவிட்டது. தனக்குப் பின்னடி, ஸ்டாலினே சர்வாதிகாரியாக வர வேண்டுமென்று தீர்மானித்தான். அப்படியே, ஸ்டாலினும், லெனின் இறந்த 1924ம் வருஷத்தில், அவனுடைய பதவியை யார் வகிப்பதென்பதைப் பற்றி ட்ரோட்ஸ்கிக்கும் ஸ்டாலினுக்கும் பெரிய மனஸ்தாபம் உண்டாயிற்று. கடைசியில் ஸ்டாலினே வெற்றி பெற்றான்.

ஸ்டாலின் எளிய வாழ்க்கையுடையவன். முன்னர், ஜார் சக்ரவர்த்திகளின் வேலைக்காரர்கள் எந்தச் சிறிய இடத்தில் வசித்துவந்தார்களோ அந்த இடத்திலுள்ள ஒரு பாகத்தில், ஸ்டாலின் தன் குடும்பத்துடன் அமைதியாக வசிக்கிறான். இவனுடைய மனைவியும், மக்களும் இவனைப் போலவே எளிய முறையில் வாழ்க்கையை நடத்துகிறார்கள். சாதாரண ஜனங்களுடன் பழகுகிறார்கள். ஸ்டாலின், ருஷ்யாவில் ஒரு தெய்வமாகக் கொண்டாடப் படுகிறானென்று சொல்லப் படுகிறது. ஆனால் அவனை ஒரு ராட்சதனென்று வெளி யுலகம் அழைக்கிறது!

ஸ்டாலின்

—ராகுல பண்டிதர்

இந்தியா அடிமைப் பட்டதற்குக் காரணம் புத்த மதமா?

இல்லை யென்கிற கட்சி

“ஜோதி”யின் மார்ச்சுமாத தலையங்கத்தில் நாகரிகம் என்ற கட்டுரை வெளி வந்தாலும் வந்தது, அஃது அநேகருடைய வாதப் பிரதிவாதங்களின் பொருளாகி விட்டது. இதைக் குறித்து நாம் சந்தோஷப் படுவதோடு பெருமையுங் கொள்கிறோம். ஏனென்றால், அன்பர்களின் சிந்தனையைத் தூண்டி விடக் கூடிய ஒரு தூண்டுகோலாக அமைந்ததல்லவா நமது தலையங்கம்? புத்த மதத்தினால் இந்தியா சீர் கேடடைந்து விட்டது என்ற நமது அபிப்பிராயத்தை பலமாக ஆட்சேபித்து ஒரு பௌத்த நண்பர் நமக்கு ஒரு கட்டுரை அனுப்பி யிருந்தார். இந்தக் கட்டுரையை, ஹிந்து மத ஆராய்ச்சியில் வல்ல ஒரு நண்பருக்கு அனுப்பினோம். அவர், இந்தக் கட்டுரையை மறுத்தும், நமது தலையங்கக் கருத்தை ஆதரித்தும் ஒரு கட்டுரை எழுதி யனுப்பி யிருக்கிறார். இந்த இரண்டு கட்டுரைகளையும் ஒரே சமயத்தில் வெளியிட வேண்டு மென்று முதலில் நாம் தீர்மானித்தோம். ஆனால் இட வசதியை முன்னிட்டு பௌத்த நண்பருடைய கட்டுரையை மட்டும் இந்த மாதத்தில் வெளியிடுகிறோம். அடுத்த மாதத்தில் ஹிந்து நண்பருடைய கட்டுரையை வெளியிடுவோம். இரண்டு நண்பர்களுக்கும் நமது வந்தனம்.

நம்முடைய பாரத தேசம் இப்பொழுதுள்ள இழி நிலைக்கு வந்ததற்குக் காரணம் புத்த மதந்தானென்றும், புத்தமதப் பிரசாரத்திற்குப் பிறகே இந்தியாவுக்கு அடிமை வியாதி ஏற்பட்டு விட்டதென்றும் ஜோதியின் மார்ச் மாத நியாய சபை தீர்ப்பளிக்கிறது. இந்தத் தீர்ப்பை நான் பலமாக ஆட்சேபிக்கிறேன். புத்தமதத்தினால் இந்தியா பல துறைகளிலும் நன்மை யுடைந்திருக்கிற தென்பது என்னுடைய உறுதியான அபிப்பிராயம். எனது இந்த அபிப்பிராயத்தை இந்தக் கட்டுரையின் மூலம் தெளிவு படுத்திக் காட்டுகிறேன்.

இந்தியாவின் தற்போதைய இழி நிலைமைக்கு புத்த மதம் காரணமென்று சொன்னால், பர்மா, சையாம், ஜப்பான் இந்த தேசங்களெல்லாம் புத்த தேசங்களல்லவா? இந்தியா அடிமைப் பட்ட எவ்வளவோ நாட்கள் வரை, அதாவது 1815ம் வருஷம் வரை, சிலோன் வாசிகள் தங்களுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காக யுத்தம் செய்தார்களே. பர்மா, 1875ம் வருஷம் வரை அடிமையாகி விட வில்லையே. சையாம், இன்றுங் கூட சுதந்திரமா யிருக்கிறதே. ஜப்பானோ, அது அடிமையாக வேண்டாம், மற்றவர்களை அடிமையாக்காம லிருந்தால் போதும் போலிருக்கிறதே. இப்படியிருக்க இந்தியாவுக்கு மட்டுந்தானா புத்த மதம் கெடுதி செய்து விட்டது?

சில வைதிகர்கள் வாதஞ் செய்கிறார்கள்:— "புத்த மதப் பிரசாரம் நம்முடைய பாரத தேசத்தில் சுமார் ஒரு ஆயிரவருஷ காலம் நிலவியிருந்தது; அது ஒரு கவர்ச்சியும் புதுமை நிறைந்ததுமாயிருந்தது. மேலும் இந்த மதத்திற்குக் கர்த்தாவோ ஒரு அரசகுமாரர். அந்தச் செல்வாக்கு வேறே இந்த மதம் பரவுவதற்குத் துணை செய்தது. ஆனால் எவ்வளவு கவர்ச்சியும் புதுமையும் நிறைந்ததாயிருந்தாலுங்கூட இந்த மதம், இந்தியர்களுக்கு நன்மையைச் செய்யவில்லை. அதுமட்டுமோ? தீமையைச் செய்துவிட்டது" என்பது இவர்களுடைய வாதம். ரொம்ப சரி. ஆனால் புத்த மதம் ஓங்கியிருந்த அந்த ஓராயிர வருஷ காலத்தில் இந்தியா, சுதந்திர இந்தியாவாயிருந்தது. பாரத தேசமெங்கணும் நம்முடைய சுதந்திரக் கொடி பறந்தது. அந்நியக் கொடியின் கீழ் அடிமைகளாய் நாம் நடமாடவில்லை. புத்தமதப் பிரசாரம் நசித்துப்போன பிற்காலத்தில்தான் இந்தியா அடிமையானது. இதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். புத்த நாகரிகத்திற்குப் பிற்காலத்தில் நம்முடைய தேசத்தில் பிராபல்யமடைந்தது வைதீக நாகரிகம். சமீப காலத்தில் தோன்றி மறைந்த தயானந்த சரஸ்வதி, இந்த வைதீகக் கொள்கையைத் திரும்பவும் நிலைநிறுத்துவதற்கு அரும்பாடுபட்டார். வேத வாக்கியங்களுக்கு அநேகமான வியாக்கியானங்கள் செய்தார். அந்த வேதமே ஈசுவரனுடைய—கடவுளுடைய—வாக்காகக் கொள்ளப்படுவது. இந்த வைதீக மதம் ஆதியில் நம்முடைய நாட்டில் வல்லமை பெறுவதற்குக் காரணமாயிருந்தவர் சங்கராச்சாரியார். ஆத்மாவே பிரம்மம்; பாவமோ புண்ணியமோ அந்த ஆத்மாவைப் பாதிப்பதில்லையென்று உறுதி செய்தவர் சங்கராச்சாரியார். ஆனால் புத்த தர்மம், ஆத்மா என்ற கற்பனை வஸ்துவுக்கு மனிதன் அடிமையாக வேண்டுமென்று உபதேசிக்கவில்லை; கடவுளால் கூறப்பட்டது வேதம் என்று சொல்லி அந்த வேதத்துக்கு நாம் அடிமையாகிவிட வேண்டும் என்று போதிக்கவில்லை; வெறும் கற்பனைகளில் நம்பிக்கை கொள்ளும்படி உபதேசிக்கவில்லை.

வர்ணாசிரம தர்மத்தை வலியுறுத்துவது வைதீக நாகரிகம். அவரவர் செய்யும் வேலைக்குத் தகுந்தவாறு வர்ணங்களை வகுத்திருக்கிறார்களாம். இவர்கள் தொழிலையா பிரித்தார்கள்? தொழிலைச் செய்யும் மனிதர்களையல்லவா துண்டு துண்டாகப் பிரித்துவிட்டார்கள்? உண்மையைக் கூறப்போனால், பாரத தேசம் அடிமையானதற்கு முக்கிய காரணம், இந்த வர்ணப் பிரிவினை—ஜாதிப் பிரிவினையல்லவா? "ஒவ்வொரு வகுப்பினரும், அவரவருடைய கடமையைச் செய்து மோட்சத்தை அடைய முடியும்" என்று கீதையில் கிருஷ்ணன் உபதேசித்திருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் இந்த வர்ணப் பாகுபாட்டிலிருந்து விடுதலை பெற்று ஒவ்வொருவரும் சந்நியாச தர்மத்தை மேற்கொள்ள வேண்டுமென்று உபதேசித்தது புத்த மதம். மனித சமூகத்தின் பொது நன்மைக்காக ஒவ்வொருவரும், அதாவது, வர்ண வீதம் பிரிக்கப்பட்டிருக்கிறவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அலுவல்களைக் கடமையாகக் கருதிச் செய்ய வேண்டு

மென்று உபதேசித் திருப்பதாக வர்ணாச்சிரமக் கொள்கையை ஆதரிப்பவர்கள் கூறுகிறார்கள். ஆனால், புத்த மத சித்தாந்தப்படி புத்தன் என்று யாரைக் கூற வேண்டுமென்றால், தனக்கு மோட்சம் கிடைப்பதாயிருந்தாலும் அந்த மோட்சத்தையும் பிறருக்காக அர்ப்பணம் செய்பவன் எவனோ அவன் தான் புத்தன். புத்தர் பெருமானுடைய வாழ்க்கையே இதற்கு அத்தாட்சியாகும். தனிமனிதனுடைய சுக துக்கங்களைப் பார்க்கிலும், சமூகத்தின் சுக துக்கங்களுக்கு முதன்மை ஸ்தானம் கொடுத்தது புத்த மதம் தான். புத்த மதம் பரவுவதற்கு முன்னே இந்தியாவில், சமூகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. புத்தர் பெருமான் தன்னுடைய சிஷ்யர்களுக்கு எவ்வித உபதேசங்களைச் செய்தார் தெரியுமா?

"ஏ, பிட்சுக்களே! மனித சமூகத்தின் நன்மைக்காக, சமூகத்தின் சுக துக்கத்துக்காக நீங்கள் வேலை செய்ய வேண்டும்."

புத்த மதக் கிரந்தங்களின் உபதேசம், பிறருக்காக வாழ வேண்டுமென்பதுதான். சில வாக்கியங்களைப் பாருங்கள்:—

"எவன் துக்கியோ, துன்பத்தால் பீடிக்கப்பட்டவன் எவனோ, அவனை, அவனுடைய துன்பத்திலிருந்து விடுதலை செய்யவேண்டும். கால்களுக்குக் கஷ்டம் நேர்ந்தால், கை உதவி செய்வதில்லையா? பிறர் நன்மை யடைவதைப் பார்த்து என் மனதில் பொங்கும் ஆனந்தமிருக்கிறதே அந்த ஆனந்தமே எனக்கு மோட்சம். அப்படியில்லாமல், எனக்குத் தனியாக ஒரு மோட்சமிருக்குமானால், அந்தச் சத்தில்லாத மோட்சத்தை யடைவதில் எனக்கு என்ன பலன்? அந்த மோட்சத்தைப் பெற்று நான் என்ன செய்யப்போகிறேன்?

ஃ ஃ ஃ

பயத்தால் பீடிக்கப்பட்டவர்களை நான் காப்பாற்றவில்லை; துக்கத்தால் பீடிக்கப் பட்டிருப்பவர்களுக்கு நான நிவாரணம் அளிக்கவில்லை. ஐயோ, என்னுடைய ஜென்மம், என் தாயாரின் பிரசவ வேதனைக்குக் காரணமாயிருந்ததைத் தவிர வேறு ஒன்றுமில்லையே.

ஃ ஃ ஃ

இந்த உலகத்திலே எத்தனையோ பேர் துன்பத்தில் உழன்றுகொண்டிருக்கிறார்கள். ஏன்? தாங்கள் மாத்திரம் சுகமாயிருக்க வேண்டுமென்று இவர்கள் விரும்புகிறார்கள். எத்தனையோ பேர் சுகஜீவிகளாயிருக்கிறார்கள். ஏன்? மற்றவர்களும் சுகமா யிருக்க வேண்டுமென்று இவர்கள் விரும்புகிறார்கள்."

புத்தர், உலக வாழ்க்கையிலேற்படும் இடுக்கண்களைக் கண்டு அலுத்துப் போய், வாழ்வையும் சாவையும் பார்த்துச் சலிப்படைந்து இந்தத் துன்பங்களிலிருந்து நிவாரண மடைவதற்காகவே புத்த மதத்தை ஸ்தாபித்தார் என்று கூறுகிறார்கள். ஐயோ பாவம்! இவர்களுடைய அறியாமைக்கு

இரங்கத்தான் வேண்டும்! புத்த தர்மத்தை ஸ்தாபிப்பதற்கு முன்னே புத்தருக்கு சகல ஐசுவர்யங்களும் நிரம்பி யிருந்தன. அரச குமாரனாகிய அவருக்குத் துன்பமென்பது இன்ன தெனத் தெரியாது. ஆனால் அவர் "மனிதத் தன்மை" நிறையப் பெற்றிருந்த மகான். இந்த உலகத்திலே இது வரை எத்தனையோ மகான்கள் தோன்றி யிருக்கிறார்கள். பிறருடைய சுக வாழ்வுக்காகத் தங்களுடைய சுக வாழ்வைப் பலியிட்டிருக்கிறார்கள். அப்படிப் பட்ட மகான்கள் எல்லோரும், உலக வாழ்க்கையிலேற்பட்ட துன்பங்களுக்குப் பயந்து தான், இந்த உலக வாழ்வைத் துறந்து விட்டார்கள் என்று கூறுவதா? அப்படியானால், தியாகம் என்பதற்கு ஏதேனும் அர்த்தம் இருக்குமா?

பாலர் முதல் விருத்தர் வரை ஆண் பெண்கள் யாவருடைய லட்சியமும், துறவு அதாவது சந்நியாசமாயிருக்க வேண்டுமென்றுபதேசித்தார் புத்தர். சாதாரண பறையனிலிருந்து பிராமணன் வரை யாவரும் சந்நியாசத்தை மேற்கொண்டு விட்டார்கள். புத்தர் காலத்துக்கு முன்னும் பின்னும், சந்நியாச தர்மத்தைக் கண்டு எள்ளிநகையாடியவர்கள் பிராமணரும் க்ஷத்திரியரும். இவர்களுடைய அவலக் கூற்றை அடக்கி ஒடுக்கியவர் புத்தர்தான். புத்தர் பிரான், யாவரையும் சந்நியாச தர்மத்தை மேற் கொள்ளும்படி உபதேசிக்கவில்லை. சந்நியாச தர்மத்தை மேற் கொள்வதற்கும் சில நியமங்களுண்டு.

"தங்களது தாய் தந்தையருடைய அனுமதி யில்லாமல் யாரும் பிட்சுக்களாக முடியாது.

யாருக்கும் கடன் பட்டிருப்பவன் எவனும் சந்நியாசியாக முடியாது.

பெரிய வியாதியுள்ளவன் சந்நியாசியாக முடியாது.

சேனை வீரன் சந்நியாசியாக முடியாது."

ஆனால், சங்கராச்சாரியாரால் ஸ்தாபிக்கப்பட்ட வைதிக மதமிருக்கிறதே அந்த நியமப்படி யாருக்கு வைராக்கியம், விரக்தி ஏற்பட்டு விட்டதோ அவர்கள் யாவரும் சந்நியாசம் பெறுவதற்கு இடமுண்டு. புத்த மதம் யாவரையும் சந்நியாசம் பெறுவதற்கு அனுமதிப்பதில்லை.

ஓராயிர வருஷம் புத்த மதப் பிரசாரம் நம்முடைய தேசத்திலே வலுப் பெற்றிருந்தது. இந்தக் காலத்தே நம்முடைய தேசத்தைப் பொறுத்தவரை துர்ப்பாக்கியமான காலமென்றுதான் கூற வேண்டும். இந்தப் பிரசாரத்தால் ஜனங்கள் இந்த உலக வாழ்க்கையை வெறுக்க ஆரம்பித்து விட்டார்கள். இவ்வுலக வாழ்க்கை அநித்தியமென்றும், மாயையென்றும் அவர்களுக்குப் போதிக்கப் பட்டது. இதனால், இந்த உலகத்திலே வாழ்ந்துகொண்டிருக்கும் ஜனங்கள் இந்த உலக வாழ்க்கையின்மீதே வெறுப்புக்கொள்ள ஆரம்பித்தார்கள். "தனி மனிதன் ஒவ்வொருவனும் மோட்சத்தை அடைய வேண்டுமென்ற அவாக் கொண்டான். அதாவது தான் வாழ்ந்துகொண்டிருக்கிற மனித சமூகத்தின் நல்வாழ்வுக்காகத் தான் வாழ வேண்டுமென்ற எண்ணம் போய், ஒவ்வொரு மனிதனும் தனக்

குத்தானேவாழ ஆரம்பித்துவிட்டான். தொழிலாளிகள் மோட்சத்தைப் பெற வேண்டுமென்ற ஆவலில், அந்த முயற்சியில் ஈடுபட்டு அவரவர் தொழிலையும் விட்டார்கள். புத்தமதம் இவற்றைத்தான் 'கல்கியது'' என்று கூறுகிறார்கள்.

புத்தமதப் பிரசாரம் வலுப் பெற்றிருந்த ஆயிர வருஷ காலந்தை மேற் கண்ட விதம் வர்ணிக்கிறார்கள். அந்தோ! எப்படிப்பட்ட காலம் அது? எந்தக் காலத்திலே இந்திய மகா ஜனங்கள் சுதந்திரக் கொடியின் கீழ் வாழ்ந்து கொண்டிருந்தார்களோ அந்த ஆயிர வருஷ காலத்தை, சந்திரகுப்தன், அசோகன் இந்த அரசர்கள் எந்தக் காலத்தில் தங்களுடைய கீர்த்திப் பிரதாபத்தை நிலை நாட்டிச் செங்கோலோச்சிக் கொண்டிருந்தார்களோ அந்த ஆயிர வருஷ காலத்தை, நாளந்தை, விக்கிரம சீலம் முதலிய சர்வ கலாசாலைகளின் கீர்த்தி இந்த உலகமெல்லாம் ஒலித்துக் கொண்டிருந்த அந்த ஆயிர வருஷ காலத்தை, இலக்கியமும் கவிதைகளும் மலிவுற்றிருந்த அந்த ஆயிர வருஷ காலத்தை, எந்தக் காலத்திலே வாழ்ந்து கொண்டிருந்த ஓவியக்காரர்கள், அஜண்டா, எல்லோரா முதலிய குகைகளில் தங்களது ஓவியங்களைத் தீட்டி விட்டு, அந்த ஓவியங்களும் அவர்களும் இன்னுங் கூட அமரர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்களோ அந்த ஆயிர வருஷ காலத்தை, புத்த மதப் பிரசாரம் வலுப் பெற்றிருந்த அந்த ஆயிர வருஷ காலத்தை, இந்தியர்களின் துர்ப்பாக்கிய காலமென்று கூறுவதற்கு வெகு துணிவு வேண்டும்!

புத்த மதத்தைப் பின்பற்றிய புத்த பிட்சுக்கள் இந்தியாவி லிருந்தவர்கள் யாவரும் எங்குப் போயினர் என்று கேட்கிறார்கள். பின்னே வந்த வர்ணாசிரம பேதத்தால், அவர்களுடைய பல வந்தத்தால், சூத்திரர்களாகவும், பஞ்சமர்களாகவும் ஆக்கப்பட்டு விட்டார்கள். சில பாக்கியசாலிகள் முஸ்லீம் மதத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

உனக்கு எல்லா விஷயங்களைப்பற்றியும் தெரியுமென்பதைக் காட்டிக் கொள்வதற்காக, சாராயம் குடிக்கிற விதத்தைப் பற்றியோ, சூதாட்ட நினுசுகளைப் பற்றியோ நீண்டநேரம் பிரசங்கம் செய்யத் தொடங்குவாயானல் உன்னுடைய உலக அநுபவத்தைப்பற்றியோ அல்லது, அறிவு விசாலத்தைப் பற்றியோ உலகத்தார் என்ன நினைப்பார்கள்?

— ஓர் அறிஞன்

—மா. சர்மா B. A. (Hons)

சிலப்பதிகாரம்—அடைக்கலம்

கடலின் மத்தி. நடு நிசி நேரம். கப்பல் ஆடி அசைந்தபடி சென்று கொண்டிருந்தது. திடீரென ஒரு புயற் காற்று எழும்பிற்று. அமைதியாய் இருந்த கடலைக் குழப்பிற்று. வலியார் வாட்டியதால் ஏற்பட்ட கோபத்தை எளியார்மேல் காட்டுவது இயற்கை. இவ் விதியின்படியே, புயலின் உக்கிரத்தைத் தாங்க முடியாமல் தவித்த கடல், மலைபோல் அலைகளை எழுப்பிக் கப்பலைத் தாக்குவதில் ஆறுதல் அடைந்தது. அலைகளால் தாக்குண்ட கப்பல் தத்தளித்தது. புயலுக்குப் பயந்து இங்கு மங்கும் ஓடித் தப்பப் பார்த்தது. முடியவில்லை. கவிழ்ந்துவிட்டது.

கப்பலில் இருந்தவர் எல்லோரும் கடலுக்கு இரையானார்கள். ஒருவன் மட்டும் அலைகளால் மோதப்பட்டு செயலற்ற நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்தான். "அஞ்ச வேண்டாம்" என்று எழுந்த ஒரு குரல் அவனுக்கு ஆறுதல் அளித்தது. அவனுக்கு அபயமளித்தது ஒரு தெய்வம். அதன் பெயர் மணிமேகலை. இந்திரன் ஏவலால் ஒரு தீவைக் காத்து வருவது அது. "நீ சென்ற ஜென்மத்தில் புண்ணியச் செயல்களைப் புரிந்தவன்" என்றுசொல்லிக் கடலில் தவித்துக் கொண்டிருந்தவனைத் தன் மந்திர சக்தியால் கரையேற்றிற்று. அன்று முதல் அவன் வம்சத்தவர் அத் தெய்வத்தைத் தம் குலதெய்வமாகக் கொண்டு போற்றி வந்தனர். அவ்வம்சத்தில் வந்தவனே கோவலன்.

கருணை மறவன்

மாந்தளிரைப் போன்ற மேனியையுடைய மாதவி ஒரு பெண் மகவைப் பெற்றாள். தீட்டுக் கழிந்ததும் கணிகையர் பலர் அப்பெண்ணுக்குப் பெயரிட மாதவி மனைக்கு வந்தனர். கோவலன் கூறியபடியே

"அணிமே கலையார்
ஆயிரங் கணிகையர்

மணிமே கலையென
வாழ்த்திய ஞான்று"

அவன்

"மங்கல மடந்தை
மாதவி தன்னொடு

செம்பொன் மாரி
செங்கை யால்" பொழிந்தான்.

ஞான நெறியில் நிற்போன். வயதேறியதனால் கூன் விழுந்து வளைந்த உடம்பினன். தண்டை ஊன்றித் தள்ளாடித் தள்ளாடி நடக்கும் ஒரு முதிய மறையவன் தானம் வாங்கிக் கொள்ள விரும்பி கோவலன் வீட்டுக்கு வந்துகொண்டிருந்தான். மதம் பிடித்த யானை ஒன்று அத் தெருவில் வந்துகொண்டிருந்தது. அம் மறையவன் கோவலன் வீட்டிற்கு அருகா

மையில் சென்று கொண்டிருந்த பொழுது அவனைத் தன் துதிக்கையால் பற்றிக்கொண்டது. இதைப் பார்த்த கோவலன், ஒரு கணமும் தாமதியாது மறையவனை நீக்கி விட்டுத் தான் யானையின் துதிக்கையில் பிடிபட்டான். பின் அதன் மத்தகத்தைப் பற்றி ஏறி அவ் யானையை அடக்கினான். ஒரு உயிரைக் காப்பாற்றத் தன் உயிரையும் மதிக்காத கோவலன் ஒரு கிருபா வீரனல்லவா?

செல்லாச் செல்வன்

ஒரு பார்ப்பனனும் அவன் மனைவியும் கீரிப் பிள்ளை ஒன்றை வளர்த்து வந்தனர். ஒருநாள் பார்ப்பனி குளத்துக்குச் சென்றிருந்தாள். அவள் குழந்தை தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்தது. அச்சமயம் ஒரு பாம்பு வந்தது. கீரி, அப் பாம்பைக் கொன்று விட்டு, தான் செய்த அற்புதத்தைப் பார்ப்பனனுக்கு அறிவிக்க வாயிலில் வந்து காத்துக் கொண்டிருந்தது. குளத்திலிருந்து வந்தவள், கீரியின் வாயில் இரத்தத்தைப் பார்த்தாள். ஒன்றும் யோசிக்காமல், அது தன் குழந்தையைக் கொன்றிருக்கும் என்று நினைத்து தண்ணீர் குடத்தை அதன்மேல் எறிந்தாள். கீரி இறந்தது. உள்ளே சென்று பார்த்த பின்தான் பார்ப்பனிக்குக் கீரி செய்த காரியம் தெரிந்தது. அநியாயமாய்த் தனக்கு உதவி செய்த கீரியைக் கொன்றதற்கு வருத்தப்பட்டாள். வெளியில் சென்றிருந்த பார்ப்பான் திரும்பி வந்தான். தன் மனைவி காரணமின்றிக் கீரியைக் கொன்ற விஷயம் தெரிந்தவுடன் இனி "கொலை செய்த உன் கையால் உண்பதே பாபம்" என்று சொல்லி வீட்டை விட்டுப் போய்விட்டான்.

பார்ப்பனி என் செய்வாள்? கீரியைக் கொன்றதால் ஏற்பட்ட வருத்தத்தோடு, கணவன் வெளியேறிய வருத்தமும் சேர்ந்தது. தன் புருஷன் கொடுத்த ஒரு வடமொழிச் சுலோகம் எழுதப்பட்ட ஓலையை எடுத்துக்கொண்டு, பண்டார வணிகர்களிடம் காட்டித் தன் குறையைத் தீர்க்க வேண்டினாள். கோவலன் அவளைக் கூப்பிட்டு, அவள் கஷ்டத்தைத் தெரிந்துகொண்டு, அவள் கொலைப் பாவம் தீரத் தான தருமம் செய்தான். பின் யாத்திரைக்குச் சென்ற அவள் கணவனை வரவழைத்து அவர்களிருவரும் சுகமாய் இருக்கும் படிச் செல்வமும் கொடுத்தான். ஈதன்றோ செல்வத்துப் பயன்!

இல்லோர் செம்மல்

பத்தினி ஒருத்திக்குப் பழி ஏற்பட்டது. அது காரணமற்றது. இருப்பினும் அவள் கணவனிடம் "அவள் பழிகாரி" என்று ஒருவன் பொய் சாக்ஷி கூறினான். பொய் சாக்ஷி கூறுவோரைப் புடைத்துண்ணும் பூதம் தன் பாசக் கயிற்றால் அவனைக் கட்டிக் கொண்டு போயிற்று. அவனுடைய முதிய தாய் மிகவும் வருத்தப்பட்டதைக் கண்டு, கோவலன் அப் பூதத்தினிடம் "என்னை ஏற்றுக்கொண்டு அவனை விட்டுவிடு" என வேண்டினான். "இவ்விழிந்தவனுக்குப் பதில் உன்னை ஏற்றுக்கொண்டு நான் நரகத்தைத் தேடிக்கொள்ள மாட்டேன்" என்று கூறிப் பூதம் அவன் எதிரிலேயே பொய் சாக்ஷி கூறியவனை அடித்துக்

கொன்றது. பின் கோவலன் அவன் தாய்க்கும், சுற்றத்தார்க்கும் பொருளுதவி செய்து அவர்களைத் தன் சுற்றத்தார் போலப் பல வருஷங்கள் காத்து வந்தான். இதிலிருந்து கோவலன் இல்லத்தோரைப் பாது காக்கும் சீரிய குணமுடையோன் என்று தெரிகிறதல்லவா?

மாடலன் :

தலைச் செங்காடு, தேவாரம் பெற்ற சிவஸ்தலம். அப்பதியில் பார்ப்பனக் குலத்தில் பிறந்தவன். நான்கு வேதங்களையும் நன்கு கற்றவன். கற்றுவழி நிற்கும் பெற்றியன். அவன் தீர்த்த யாத்திரை செய்ய வேண்டுமென்று விரும்பினான். அகத்தியனுடைய பொதிய மலையை வலங் கொண்டு கன்னியர் குமரிக்குச் சென்றான். குமரிக் கடலில் குளித்து விட்டுத் திரும்பி வரும்போது, மதுரையில் கவுந்தி முதலியோர் தங்கியிருந்த தவப் பள்ளியில் வந்து தங்கினான்.

மதுரையின் மாண்புகளையும், பாண்டியன் பெருமையையும், கவுந்திக்குக் கூறிக் கொண்டிருந்த கோவலன் அவனைக் கண்டான். முன்பே அறிவானாகையால் அவனை வணங்கினான். மாடலன் கோவலனை அங்கு எதிர் பார்க்கவில்லை. ஆகவே தன்னை அவன் வணங்கியபோது திகைத்துப் போனான். பின் கண்ணகியையும் கூட்டி வந்திருப்பதை அறிந்தும் அவன் திகைப்பு அதிகரித்தது. 'நீ இங்குவரக் காரணமென்ன?' என்று கேட்டானே ஒழிய அவன் பதில் கூற அவகாசம் அளிக்கவில்லை. "நான் அறிந்தவரை நீ இப்பிறப்பில் செய்தவையெல்லாம் நற்காரியங்களே. ஞான நெறிக்கு எல்லையான மறையவனை யானையினுடையபிடிப்பினின்றும் காப்பாற்றிய கிருபாவீரனே! பார்ப்பனியின் துயரைப் போக்கிய தொலையாச் செல்வத்தோனே! ஏழைகளைக் காக்கும் இனிய தன்மையுடையவனே!" எனத் தானறிந்த அந்நிகழ்ச்சிகளை கவுந்தியடிகளும் அறியக் கூறினான். பின்னும், இவ்வளவு நற்குணம் பொருந்திய நீ இவ்வாறு மனைவியுடன் மதுரைக்கு வர நேர்ந்தது உன் பழைய வினையின் காரணமோ? அறியேன்!" என்று கூறி இரங்கினான்.

"இம்மை செய்தன யானறி
நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி
யுழந்தித்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன்
போந்தது
விருத்தகோ பால நீயென
வினவ."

கதையின் ஆரம்பத்தில் செவ்வேளைப் போல் அழகுடையவனென்றும், மண் தேய்த்த புகழையுடையவனென்றும் நமக்குக் கோவலனை அறிமுகப்படுத்திய ஆசிரியர், இதுவரை அவனுடைய குணங்களைப் பற்றி ஒன்றுங் கூறவில்லை. நாம் அவனைப் பற்றி அறிந்து கொண்டதெல்லாம் ஏற்பிற் சிறந்த கண்ணகியைத் தவிக்க விட்டு விட்டு மாதவியோடு காலங் கழித்தான் என்பதே. ஆகவே கோவலன் நம் அநுதாபத்துக்குப் பாத்திரனல்லன். அவனிடம் இதுவரை நாம் காட்டிய விருப்ப மெல்லாம் கண்ணகி

யைக் குறித்தே ஒழிய அவனுக்காக அன்று.

இப்படிப்பட்ட நம்மன நிலையை மாற்றி, நாம் கோவலனிடம் உண்மையான அநுதாபம் காட்ட வேண்டுமென்றே, இங்கு மாடலன் மூலம் ஆசிரியர் நமக்கு அவன் குணங்களைக் கூறுகிறார். கோவலன் வெகு சீக்கிரத்தில் கொலைக்காளாகிறான். அதற்கு முன் அவன் குணங்களைத் தெரிவிப்பதில் அவன் அநியாயமாய்க் கொல்லப் பட்டதற்காக நாம் அதிகவருத்தத்தை அடைவோம். இவ்விளைவு வேண்டுமென்ற காரணத்துக்காகவே, ஆசிரியர் இதுவரை கோவலனைப் பற்றி ஒன்றுங் கூறாது, இப்பொழுது அவன் குணங்களைச் சிறப்பித்துக் கூறுகிறார்.

கோவலன் கனவு:

சந்தோஷம், துக்கம் இவ்விரண்டுங் கூட தொத்து வியாதிகளைப் போல் ஒருவரிடத்திலிருந்து ஒருவருக்குப் பரவுகின்றன. கோவலன் தன் பழைய வாழ்க்கையை அறவே மறந்து மதுரையின் அழகில் ஈடுபட்டிருந்த காலத்தில், மாடலன் அவனுடைய ஞாபகத்தைத் தூண்டியதோடு, அவனுக்காக வருத்தப் படுவதையும் தெரிவித்தான். மாதவன் வருத்தம் கோவலனுக்கும் தொற்றிக் கொண்டது. அவன் மாடலனை நோக்கி, "நான் மதுரைக்கு வந்ததையே ஊழ்வினையின் பயன் என்று கூறி வருத்தப் படுகிறாய். நேற்று நான் கண்ட கெட்ட கனவு இன்னும் அதிக வருத்தத்தைத் தரத் தக்கது. இவ்வூரில் என் ஆடைகள் களவுபோய் நான் எருமைக் கடாவின் மேல் ஏறிப் போவது போலவும், கண்ணகி வருத்தப் படுவது போலவும், பின் இருவரும் சுவர்க்கம் செல்வது போலவும், மாதவி மணிமேகலையை போதியறவோன் முன் அளிப்பது போலவும் கனவு கண்டேன். அதுவும் வைகறைக் காலத்தில் கண்ட கனவாகையால் உடனே பலிக்குமோ என்று வருந்துகிறேன்" என்றான்.

கவுந்தியும் மாடலனும் அவன் கண்ணகியுடன் ஊருக்குள் சென்று தங்குவதுதான் சிறந்தது என்றும், இவ்வூரிலிருக்கும் வணிகர் மாசாத்துவான் பெயரைக் கேட்பின் அவர்களை விருந்ினராக ஏற்றுக் கொள்வர் என்றுங் கூறினர்.

மாதரி:

புறஞ் சேரியின் பக்கத்தில் பூப் போலும் கண்களையுடைய ஒரு யக்ஷிணி தேவியின் கோயில் உண்டு. அங்குச் சென்று பாற்சோறுபடைத்த பின், மாதரி என்னும் இடைக்குல மடந்தை கவுந்தியடிகளைக் கண்டு வணங்கினாள். பசுவைப் போஷித்து அதனால் வரும் பயனைப் பிறருக்கு அளிக்கும் வாழ்க்கையை யுடைய இடையர் வாழ்க்கை சிறந்தது. மேலும் இம்மாதரி நல்ல தன்மைகள் உடையவளாயும் காண்கின்றாள். கண்ணகியை இவளிடம் அடைக்கலமாக விட்டு வைப்பதில் குற்றமொன்றுமில்லை என்று நினைத்தாள் கவுந்தி.

கற்புக் கடம் பூண்ட தெய்வம்:

"மாதரி! என்னுடன் இருக்கும் இக் கண்ணகியின் சிறிய அடிகளைப் பூமகளும் அறிந்தவளில்லை. மதுரைக்கு

வரும் வழி யெல்லாம் வெம்மையின் கொடுமையால் தன் புருஷன் கஷ்டப் படுவதற்கு வருந்தினளே ஒழிய தன்னைக் குறித்து வருத்தப் படவேயில்லை. இவளைப் போல் நற்குணங்கள் பொருந்திய கற்பு என்ற ஆபரணத்தை அணிந்த மக்களே நம்காணும் பிரத்தியக்ஷ தெய்வமாம். "இவர்கள் வாழும் நாட்டில் வானம் பொய்யாது மழையைப் பொழியும். நாடு வளப்பம் மிகும்; வேந்தரும் தம் கடமை தவறாது செங்கோலாட்சி புரிந்து சிறப் பெய்துவர்; என்ற பெரியோர் வார்த்தைகளை நீ கேட்டதில்லையா?" என மாதரிக்குக் கண்ணகியின் குண விசேஷங்களைக் கவுந்தி கூறினள்.

அடைக்கலம் தந்தது:

"மேலும் இவள் புருஷனுடைய தகப்பன் பெயரைக் கேட்டால் இம் மதுரையில் இருக்கும் வணிகர் கிடைத்தற்கரிய பொருளைப் பெற்றாற் போல் மகிழ்ச்சி கொண்டு விருந் தேற்றுக் கொள்வார்கள். அது வரை இப் பெண்ணை நான் உனக்கு அடைக்கலமாகத் தந்தேன். இம்

"மங்கல மடந்தையை நன்னீர்
ஆட்டிச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம்
தீட்டித்
தேமென் கூந்தல் சின்மலர்
பெய்து
தூமடி யுடீஇ தொல்லோர்
சிறப்பின்
ஆயமும் காவலும் ஆயிழை
தனக்குத்
தாயு நீயே யாகித் தாங்கு"
என்று கூறினள்.

மாதரி மிக்க மகிழ்ச்சியோடு கண்ணகியையும் கோவலனையும் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள். அந்தி காலமாகையால் ஆடு மாடுகள் தம் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தன. அவற்றை எதிர் கொண்டு அழைக்க கன்றுகள் தங்கள் தாய்ப் பசுக்களை அழைத்தபடி ஆடி வந்தன. இடையர் தம் தோள்களிலே ஆட்டுக் குட்டிகளையும் கோடரிகளையும் உடையவராய் மந்தைகளின் பின் வந்து கொண்டிருந்தனர். அவர்களோடு வந்த இடைக்குலப் பெண்கள் மாதரி அழைத்துச் செல்லும் மடந்தையின் அழகை வியந்த வாறு அவர்களைச் சூழ்ந்து சென்றனர். மதுரை நகரத்தின் மதிலைக் கடந்து ஆயர்பாடிக்குச் சென்று, அங்கு மாதரி காண்பித்த புது வீட்டில் கண்ணகியும் கோவலனும் தங்கினர்.

தெருக்களில் வேடிக்கை செய்யும் பாம்பாட்டி பாம்புக் கூடையை திடீரெனத் திறந்து விட மாட்டான். ஒரு கூடையின் உள்ளிருக்கும் பாம்பைப் பற்றிப் பல விஷயங்களைக் கூறிய பின் கூடையைத் திறப்பது போல் நடிப்பான். நாம் பாம்பைப் பார்க்கத் தயார் செய்து கொள்வோம். ஆனால் அப் பாம்பாட்டி திறப்பது போல் பாசாங்குசெய்வானே ஒழியத் திறக்கமாட்டான். இரண்டு மூன்று முறை நம்மை ஏமாற்றிய பின் தான் பாம்பைக் காட்டுவான். இப்படிச்

செய்வதால் நம்மனத்தில் அப் பாம்பைப் பார்க்க வேண்டும் என்ற விருப்பம் பார்ப்பதற்கு முன் அதிகமாகிறது.

அதைப் போலவே காவியகர்த்தாக்களும் முடிவைச் சீக்கிரம் கூறுவதில்லை. கதைகளில் முடிவுதான் முக்கியம். அது நம்மால் ஒப்புக் கொள்ளக் கூடியதாயும், நம்மனத்தில் ஆழ்ந்து பதிந்து நம் உணர்ச்சிகளை எழுப்பக் கூடியதாயுமிருக்க வேண்டும். அதற்காக ஆசிரியர்கள் முடிவைப் பற்றிப் பலமுறை குறிப்பாய்க் கூறி, அதில் நமக்கு விசேஷ விருப்பத்தை விளைவித்து பின்னர்தான் அம்முடிவைக் கூறுவர். இப்படி முடிவைத் தடைப் படுத்துவதற்கு அவர்கள் உபயோகிக்கும் உபாயம் உபாக்கியானங்களைக் கூறுவதே.

ஆனால் கதைக்குச் சம்பந்தமற்ற உபாக்கியானங்களைக் கூறுவது கதையின் சுவாரஸ்யத்தைக் குறைத்து விடும். கதையின் போக்கைத் தடுப்பதேன்று, கதையை விளக்கக் கூடிய உபாக்கியானங்கள் தான் சிறந்தவை. இவ்வதிகாரத்தில் கூறியவை எல்லாம் கோவலன் குணங்களைக் கூறுவனவே.

இனி கவுந்தியடிகள் கூறிய கதையோ! அதுவும் சிறந்த உபாக்கியானங்களின் இனத்தையே சேரும். காவியங்களின் நோக்கம் சிறந்த நீதிகளைத் திருஷ்டாந்த மூலம் விளக்குதல் என்று முன்னரே கூறினோம். இவ்வுபாக்கியானம் ஒரு சிறந்த வாழ்க்கை முறையைப் போதிக்கிறது. அதுவும் இச் சமயத்தில் இதைக் கதையில் நுழைத்ததற்குத்தான் நாம் ஆசிரியரைப் பாராட்ட வேண்டும்.

"கெட்டால் மதிதோ .றும்" என்பது வழக் .. நம் அனுபவத்தில் கஷ்டப்படும் போது நம் மனதில் பதியும் எண்ணங்களே நிலைத்து நிற்கின்றன என்று அறிவோம். ஆகவே சிறந்த வழியைக் காட்டும் இவ்வுபாக்கியானத்தை, கதையின் கஷ்டத்தைத் தரக் கூடிய முடிவுக்குப் முன்னர் வைத்திருக்கிறார் ஆசிரியர். முடிவுக்குப் பின் சுருக்கமாய் "நல்லதையே நாடிச் செய்யுங்கள்" என்று போதிக்கிறார். அப்போதனையைப் பின்பற்ற வழி காட்டியாக வேண்டி இவ்வுபாக்கியானம், கோவலனுக்குக் கவுந்தி கூறிய அறவுரைகள், சாரணர் கூறிய அறவுரைகள் முதலியவற்றை முன்னரே கூறி முடித்திருக்கிறார். இவைகளை ஏற்கனவே அறிந்தால் நாம் முடிவின் போது "இத்தகைய கஷ்டம் நம் வாழ்க்கையில் வராது. இருக்க வழியென்ன?" எனநினைக்கும் சந்தர்ப்பத்தில்; "நல்வினையைச் செய்யுங்கள்" என்ற ஆசிரியரின் போதனையைக் கடைப் பிடித் தொழுகத் தகுதியுடையவராகிறோம்.

——வ. பார்த்தசாரதி

அன்பினால் வெற்றிகொள்

மகனே! அறிஞர்கள், மனிதனை, என்னவென்று சொல்லுகிறார்கள் தெரியுமா? சமுதாயப் பிராணி என்று சொல்கிறார்கள். அதாவது, மனிதன், மிருக சுபாவத்தை யுடையவன் என்பதை இந்த வாசகம் ஊர்ஜிதம் செய்கிறது. மனிதன், தெய்வத் தன்மை நிறைந்தவனென்றும், இதனால் அவன் தெய்வீக சக்தியாகிய அஹிம்சையைக் கையாள வேண்டுமென்றும், இன்று நேற்றல்ல, ஆயிரக்கணக்கான வருஷங்களாகப் பிரசாரம் செய்யப்பட்டு வந்திருக்கிறது. ஆனாலும், மனிதன், மிருக சுபாவத்தை விட்டானா பார்த்தாயா? இப்பொழுது ஐரோப்பாவிலே நடைபெறுகிற யுத்தம் ஒன்று போதுமே.

மற்றவர்களைச் சீர்திருத்த வேண்டுமானாலுஞ் சரி, ஒழுங்குபடுத்த வேண்டுமானாலுஞ் சரி, மனிதன், பலாத்காரத்தைத்தான் உபயோகிக்க வேண்டுமென்று கருதுகிறான். ஏனென்றால் அதுதான் சுலபமான வழி. பலாத்காரமானது எப்பொழுதுமே காரண காரியங்களை விசாரிக்காது; எவ்வித தர்க்கவாதத்திற்கும் இடங் கொடாது. தனக்கு வழியாகச் சென்று ஒருகாரியத்தைச் சாதிக்க வேண்டுமென்றால் அதற்குப் பலாத்காரந்தான் சரியான வழி. காட்டுமிராண்டி ஜாதியினர் எவனைப் பெரியவனென்று கருதுகிறார்களென்றால், எவன் ஓங்கியடிக்கிறானோ அவன்தான் பெரியவன். அவனுக்குத்தான் அதிக மரியாதையுண்டு. காட்டுமிராண்டி ஜாதியினரைச் சொல்லப் போவானேன்? நாகரிக ஜாதியினர் என்று பெயரெடுத்திருக்கிறவர்கள் கூட, ஓங்கியடிக்கிறவனை பலவான் என்ற சித்தாந்தத்தைத்தான் அனுஷ்டிக்கிறார்கள். ஐரோப்பிய நாகரிக நாடுகளிலே பெரிய மனிதர்களிடையில் விநோதமான வழக்கமொன்றுண்டு. அதாவது, பெரிய மனிதர்கள் இரண்டு பேர்களுக்கிடையில் ஏதோ வாதப் பிரதிவாதம் ஏற்பட்டு அபிப்பிராய பேதம் முற்றி விடுமானால் அப்பொழுது யாருடைய அபிப்பிராயம் சிலாக்கியமானது என்பதை முடிவு செய்துகொள்ள வேண்டுமானால் என்ன செய்வார்கள் தெரியுமா? கத்தியெடுத்துச் சண்டை போடுவார்கள்; அல்லது துப்பாக்கியெடுத்துக்கொண்டு ஒருவர்மீதொருவர் குறி பார்த்துச் சுடுவார்கள்; அல்லது குத்துச் சண்டை போட்டுக் கொள்வார்கள். இதற்கு 'டூயெல்' (Duel) என்று பெயர். அதாவது "இருவர் சண்டை" யென்று அர்த்தம். இந்தச் சண்டையிலே யார் வெற்றி பெறுகிறானோ அவனுடைய அபிப்பிராயந்தான் சரி. என்ன விநோதமான தீர்ப்பு பார்த்தாயா! ஆனால் அதிருஷ்டவசமாக, இந்த "இருவர் சண்டை" சமீப காலத்திலிருந்து காணப்படவில்லை. தனிப்பட்ட நபர்கள் இங்ஙனம் சண்டை போடுவது போய், இப்பொழுது நாகரிக தேசங்கள் ஒன்றுக்கொன்று தங்கள் எல்லைத்

தகராறுகளைத் தீர்த்துக்கொள்ளவோ, அதாவது ஏற்கனவே செய்துகொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தங்களை ஊர்ஜிதம் செய்துகொள்ளவோ யுத்த முறையைத்தான் கையாள்கிறார்கள். இப்படிக் கையாள்வதுதான் நாகரிகமென்றும் கருதுகிறார்கள். கிரேக்க ஏகாதிபத்தியமும் ரோம ஏகாதிபத்தியமும் ஓங்கியிருந்த காலத்திலிருந்து நாளது தேதி வரைக்கும் யுத்தத்திற்கு மகத்தான கௌரவம் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. வீரம், கீர்த்தி என்ற உயர்ந்த வார்த்தைகளெல்லாம் இந்த யுத்தத்தை ஒட்டியே உபயோகிக்கப்படுகின்றன. பலாத்காரத்திற்கு இவ்வளவு மகத்துவம் ஏற்பட்டிருக்கிறது. இதனால், அன்பினால் மானிட சமுதாயத்தை ஒன்றுபடுத்த முடியும், மானிட சமுதாயத்திற்குச் சேவை செய்ய முடியும் என்று யாராவது சொன்னால்கூட அதை யாரும் ஏற்றுக்கொள்ளாத நிலையில் இன்றைய உலகம் இருக்கிறது. என்ன ஆச்சரியம்!

இப்படியிருந்தாலும் பலாத்கார முறையைக் காட்டிலும் அன்பு முறைதான் சிரேஷ்டமானதென்பதை அறிஞர்கள் அங்கீகரித்துக் கொண்டிருக்கின்றனர். இன்று நேற்றல்ல, நூற்றாண்டுகள் கணக்காக அறிஞர்கள் இந்த அன்பு உபதேசத்தைச் செய்துகொண்டுதான் வருகின்றனர். கி. பி. 11, 12வது நூற்றாண்டுகளில், கிறிஸ்தவர்கள், தங்கள் கிறிஸ்தவமதத்தின் புனிதத் தன்மையைக் காப்பாற்றும் பொருட்டுச் சிலுவைப் போர்கள் நடத்தினார்கள். அன்பையும் பணிவையும் போதித்த கிறிஸ்து நாதரின் தர்மத்தை, ஆயுத பலத்தைக் கொண்டு காப்பாற்ற முற்பட்டு விட்டார்கள்! இப்படி இவர்கள் ஆயுதப் போர் நடத்திக் கொண்டிருந்த காலத்திலும், சில அறிஞர்கள் ஆங்காங்குத் தோன்றி அன்பு உபதேசத்தைச் செய்துகொண்டுதான் வந்தார்கள். இவர்களை ஜனங்கள் பரிகசித்தார்கள். அதிகாரிகள் பயமுறுத்தினார்கள். ஆயினும் இவர்கள் தங்கள் அன்புத் தொண்டை விடாமற் செய்துகொண்டுதான் வந்தார்கள். இவர்களெல்லாரும் மனிதத்தன்மை நிறைந்தவர்கள்.

மனிதர்களாகிய நாம் வளர்ச்சியடைந்து கொண்டுவருகிறோமென்று சொன்னால் நம்முடைய மனிதத்தன்மை வளர்ந்துகொண்டு வரவேண்டுமென்பதுதான் அர்த்தம். அப்படியானால் நாம் ஒவ்வொருவரும் மேலே சொல்லப்பட்ட மகான்களைப் போல் அன்பு உபதேசகர்களாகவல்லவோ ஆகவேண்டும்? அன்பு வாழ்க்கையையல்லவோ நாம் நடத்த வேண்டும்?

அன்பு வழியைப் பின்பற்றி நாம் நடந்தோமானால், அதனால் விளைவது நன்மையே தவிர தீமையில்லை. அன்பு நெறியினால் நாம் உயர்வதோடு மற்றவர்களையும் நாம் உயர்த்துகிறோம். அன்பின் செல்வாக்குக்குட்படுகிறவர்கள் யாருமே உயர்வு அடைகிறார்கள்; நாகரிகமுள்ளவர்களாகிறார்கள். அவர்களுக்கு ஒரு விதமான தன்னம்பிக்கை உண்டாகிறது. எப்படிப்பட்ட எதிர்ப்பையும் சமாளிக்க வல்ல சக்தி அன்பு ஒன்றுக்குத்தான் உண்டு. இவ்வளவு சக்தி வாய்ந்த இந்த அன்பை, தனிப்பட்ட நபர்கள் விஷயத்தில் மட்டும் பிரயோகிக்காமல், தேசங்களுக்கிடையே பிரயோகித்தால் எவ்

வளவோ நலனுடையதா யிருக்கும்? கிராமங்களிலே நீ பார்த்திருக்கலாம். ஒரு கட்சிக்கும் மற்றொரு கட்சிக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டால் அவர்கள் கோர்ட்டுகளுக்குச் செல்வதில்லை. கிராமத்திலுள்ள சில பெரிய தனக்காரர்களைக் கொண்டு மத்தியஸ்தம் செய்யச் சொல்கிறார்கள். அவர்கள் செய்கிற மத்தியஸ்தத்திற்கு உபய கட்சிக்காரர்களும் சம்மதப்படுகிறார்கள். அன்பினால் எவ்வளவு பெரிய மனஸ்தாபங்களையும் தீர்த்துக் கொண்டு விட்டார்கள் நமது முன்னோர்கள். அவர்களை 'நாகரிக மற்றவர்களென்றும் இங்கிதமறியாதவர்களென்றும் நாம் சொல்லிக் கொண்டு வருகிறோம். ஆனால் இப்பொழுது நாம், நாகரிகர்களென்று பெருமையோடு சொல்லிக் கொள்கிற நாம், எதற்கெடுத்தாலும் கோர்ட்டென்றும் வக்கீலென்றும் போகிறோம் உண்மையில் நாம் நாகரிகர்களில்லை. நம்முடைய முன்னோர்கள்தான் நாகரிகர்கள்.

எமர்ஸன் என்ற அமெரிக்க அறிஞன் கூறுகிறான்:— "பல தெய்வங்களை வணங்கிக்கொண்டும் பரஸ்பர சத்துருக்கள் போலவும் நாம் இந்த உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இதனால் உலகம் சலித்துப் போய்க் கிடக்கிறது. இப்படிப்பட்ட உலகத்திற்கு அன்பானது ஒரு புதிய ஜீவகளையைக் கொடுக்கும். அன்பு என்னும் குழந்தைக்கு எவ்வித ஆயுதமும் கிடையாது. ராஜ தந்திரிகளின் தந்திரோபாயங்களையும், ராணுவப் படையின் வீராவேசத்தையும் இந்தக் குழந்தையானது மாற்றிவிடும். பலாத்காரமானது எங்கெங்கு பிரவேசிக்க முடியாதோ அங்கெல்லாம் அன்பானது நுழைந்து செல்லும். மற்றப் பலாத்கார சக்திகளால் அடைய முடியாத சித்திகளை இந்த அன்புச் சக்தியானது அடைய முடியும்." முற்காலத்தில் பைத்தியம் பிடித்தவர்கள், குஷ்டரோகிகள், அடிமைகள், குற்றவாளிகள் முதலியோர்களின் விஷயத்தில் பலாத்கார முறைகளைக் கையாண்டார்கள். பைத்தியக்காரர்கள் இரும்புச் சங்கிலிகளினால் கட்டப்பட்டு, மிருகங்களைப்போல் கூடுகளிலே அடைக்கப்பட்டார்கள். குஷ்டரோகிகளை எங்காவது ஒதுக்குப் புறத்தில் தள்ளிவிட்டார்கள். என்ன கொடுமை? இவையெல்லாம் இப்பொழுது மாறுதலடைந்திருக்கின்றன. அன்பு முறைகளையே கையாள வேண்டுமென்று எண்ணம் பரவியிருக்கிறது. இதனால் அன்புக்கு ஒரு புதிய சக்தி ஏற்பட்டிருக்கிறதென்று தெரிகிறதல்லவா?

நாகரிகமாக நடந்து கொள்வது என்று சொன்னாலே அன்பாக நடந்து கொள்வது என்றுதான் அர்த்தம்.

ஆதலால், நீ ஒரு நாகரிக புருஷனாக முயற்சி செய். அதாவது எல்லோரிடத்திலும் அன்பு செலுத்து. அப்பொழுதுதான் நீ எடுத்த காரியத்தில் வெற்றியடைவாய்.

ருஷ்யாவைப் பற்றி—

உலகத்திலேயே மிகப் பெரிய நாடுகள் மூன்று. அவை முறையே சீனா, இந்தியா, ருஷ்யா. சீனாவும் இந்தியாவும் ஒரே கண்டத்தைச் சேர்ந்தவை. ஆனால் ருஷ்யாவோ, ஆசியா கண்டத்திலும் ஐரோப்பா கண்டத்திலும் சம்பந்தப் பட்டிருக்கிறது. ஆசியா கண்டத்தில் மூன்றில் ஒரு பகுதி ருஷ்யா. 1914ம் வருஷ ஐரோப்பிய மகா யுத்தத்திற்கு முன்னர், பின்லாந்து, லிதுவனியா, எஸ்டோனியா, லாட்வியா முதலியவை ருஷ்யாவைச் சேர்ந்திருந்தன. வார்சேல் சமாதான உடன்படிக்கைக்குப் பிறகு மேற்படி பிரதேசங்கள் தனித்தனி சுதந்திர நாடுகளாக்கப் பட்டன. இந்த நாடுகளைத் தவிர்த்த மற்றப் பிரதேசங்கள் சோவியத் ருஷ்யா என்று அழைக்கப் படுகிறது. 1926ம் வருஷ ஜன கணிதப்படி, சோவியத் ருஷ்யாவின் விஸ்தீரணம் 8,250,000 சதுர மைல். ஜனத்தொகை சுமார் 170,000,000. எப்படி இந்தியாவில் பலவிதமான சீதோஷ்ண ஸ்திதிகளும், பலவித மதங்களும், பலவித பாஷைகளும் இருக்கின்றனவோ அதைப் போலவே ருஷ்யாவிலும் இருக்கின்றன.

ருஷ்யாவின் வடக்கெல்லை வட மகா சமுத்திரம்; கிழக்கே பசிபிக் மகா சமுத்திரம்; தெற்கே சீனா, இந்தியா, ஈரான் துருக்கி முதலியன; மேற்கே பின்லாந்து, போலந்து, ருமேனியா முதலியன.

1939ம் வருஷம் ஹிட்லர், பின்லாந்தின் ஒரு பாகத்தை ஆக்ரமித்துக் கொள்ள முயற்சி செய்த போது, ஏற்கனவே ருஷ்யாவின் சுவாதீனத்திலிருந்து பின்னர் தனித்தனி நாடுகளாகச் சிருஷ்டிக்கப்பட்ட லாட்வியா, எஸ்தோனியா, லிதுவனியா முதலிய பிரதேசங்களை ருஷ்யா ஆக்ரமித்துக் கொண்டு விட்டது. அப்படியே பின்லாந்தின் ஒரு பாகத்தையும், ருமேனியாவிலுள்ள பெஸ்ஸரேபியாவையும் ஆக்ரமித்துக் கொண்டு விட்டது.

ருஷ்யாவை ஏழு தனித்தனிக் குடியரசு நாடுகளாகப் பிரித்திருக்கிறார்கள். இவை முறையே ருஷ்ய சோவியத் குடியரசு, உக்ரேன், ஒயிட் ருஷ்யா, ட்ரான்ஸ்காக்கேஷியன் குடியரசு, உஸ்பெக், தாத்ஜிக், டர்க்கோமான் என்பவை யாகும். இவை தனித்தனி நாடுகளைப் போல் சுயாதிகார முடையவை. ஆனால் ருஷ்யக் குடியரசு சமஷ்டியில் இவை இணைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு குடியரசுப் பிரதேசமும் தனித்தனி சுயாதிகாரமுள்ள மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, ருஷ்யக் குடியரசு என்கிற பிரதேசமானது பதினாறு மாகாணங்களாகவும், ட்ரான்ஸ்காக் கேஷியக் குடியரசானது மூன்று மாகாணங்களாகவும் பிரிக்கப் பட்டிருக்கின்றன. ருஷ்யக் குடியரசில் இணைக்கப்பட்டிருக்கிற ஏழு குடியரசு நாடுகளின் விஸ்தீரணம், ஜனத்தொகை முதலிய விவரங்கள் வருமாறு:—

பெயர்	தலை நகரம்	விஸ்தீரணம் சதுரமைல்	ஜனத்தொகை
ருஷ்யக் குடியரசு	மாஸ்கோ	7,624,829	100,858,000
உக்ரேன்	கார்க்கோவ்	174,412	29,020,301
ஒயிட் ருஷ்யா	மின்ஸ்க்	49,070	4,924,624
ட்ரான்ஸ்காக்கேஸியன் குடியரசு	பாக்கு	71,233	5 850,723
உஸ்பெக்	ஸாமர்க்கண்ட்	74,800	4,442,800
தாத்ஷிக்	ஸ்டாலின்பாட்	56,608	827,400
டர்க்கோமான் குடியரசு	அஸ்காபாத்	189,625	1,030,549

இவை [illegible] கலலாம் மேலாக "சுப்ரீம சோவியத்" என்ற நிருவாக சபை இருக்கிறது. இந்த அகில ருஷ்யாவினுடைய நிருவாகத் தையும் மேற்பார்வை செய்கிறது. உலகத்திலேயே மிகச் சிக்கலான அரசியல் முறை, ருஷ்ய அரசியல் முறை என்று அரசியல் பண்டிதர்கள் கூறு கிறார்கள். ஆனால் இந்த அரசியல் முறையின் கீழ் ஜனங்களுக்கு எல்லா விதமான உரிமைகளும் அளிக்கப் பட்டிருக்கின்றன.

1924ம் வருஷத்திலிருந்து ருஷ்ய அறிஞர்கள் ஐந்து வருஷத் திட்டம் என்று போட்டுக் கொண்டு, நாட்டின் பொருளுற்பத்திச் சக்தியையும், பொருளாதார வசதிகளையும் அதிகப் படுத்தி வந்திருக்கிறார்கள். மூன்று முறை இந்த ஐந்து வருஷத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றது. இந்தத் திட்டங்களின் விளைவாக, ருஷி யாவில் என்றுமில்லாத ஒரு பொருளா தாரச் செழிப்பும், கல்வி யறிவுப் பெருக்கமும் ஏற்பட்டிருக்கின்றன. ஜார் ஆட்சிக் காலத்தில் நூற்றுக்குச் சுமார் மூன்று பேர் கூட கல்வி ஞான முடையவர்களாயிருக்க வில்லை. இப் பொழுது ஏறக்குறைய நூற்றுக்கு தொண்ணூற்று ஏழு பேருக்கு மேல் கல்வி யறிவு பெற்றவர்களா யிருக் கிறார்கள்.

ருஷ்யாவில் சோவியத் ஆட்சி முறை ஏற்பட்ட பிறகு, ராணுவ பலம் பெரி தும் அதிகரிக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லப் படுகிறது. அநேக விதமான நூதன யுத்த தளவாடங்களும் கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன வென்று சொல்கிறார்கள். இப்பொழுது எதிர் பாராதவிதமாக ஜெர்மனிக்கும் ருஷ்யா வுக்கும் மூண்டிருக்கிற யுத்தத்தி லிருந்து ருஷ்யா எங்ஙனம் வெளி யேறப் போகிறதென்பதைப் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்.